5

15-4-55

# கண்ணன்

## குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை




OFFICE OF THE
12 MAY 1955
925
2-55

# செய்திகள்

## குழந்தைகள் நாடக விழா

சென்ற மாதம் மாம்பலம் ஹிந்தி பிரசார சபை மண்டபத்தில் குழந்தைகள் நாடக விழா ஒன்று நடைபெற்றது. குழந்தைகளுக்காக எழுதப்பட்ட ஆறு நாடகங்களைக் குழந்தைகளே நடித்துக் காட்டினார்கள். இந்த விழாவை நமது முதுபெரும் அறிஞர் ராஜாஜி அவர்கள் துவக்கி வைத்தார். 'அன்னை சொல் அமிர்தம்' என்ற நாடகத்தை நடித்துக் காட்டிய அடையாறு சிறுவர் சங்கத்தினருக்கு முதல் பரிசு கிடைத்தது. மற்ற ஐந்து நாடகங்களுக்கும் இரண்டாவது பரிசு பகிர்ந்து அளிக்கப்பட்டது. நாடகங்களில் பங்கு கொண்ட எல்லாக் குழந்தைகளுமே சிறப்பாக நடித்து அனைவரையும் மகிழ்வித்தார்கள். நாடக ஸீன்களும் பின்னணி இசையும் இல்லாமல் இருந்ததே நாடகங்கள் வெற்றிகரமாக நடக்கக் காரணமாக இருந்தன.



## அநாதை ஆசிரமம்

தேப்பெருமாநல்லூர் அன்னதான சிவன் அநாதை ஆசிரமத்தின் முதல் ஆண்டு விழா 6-3-'55-இல் குடந்தை சப் கலெக்டர் ஸ்ரீ என். ராமகிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ தேவன் (ஆனந்த விகடன்) ஆசிரமத்தின் மாஜி தலைவர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார். அச் சமயம் கனவு பலித்தது என்ற நாடகத்தை ஆசிரம மாணவர்கள் நடித்துக் காட்டினார்கள்.

## சென்னையில் டெலிவிஷன்

சென்னை மவுண்ட் ரோட்டில் பிலிப்ஸ் ரேடியோ மின்சாரக் கம்பெனி இருக்கிறது. இந்தக் கம்பெனியின் வெள்ளி விழாவையொட்டி ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது. இதில் முதல் முறையாக ஒரு டெலிவிஷன் சாதனம் அமைக்கப்பட்டு வேலை செய்தும் காண்பிக்கப்பட்டது. மாணவருக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கண்காட்சியிலுள்ள இந்தச் சாதனம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வைத்தியம், தொழிற்சாலை வேலைகளுக்கும் இதைப் பயன்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது.

## சர்ச்சில் விலகினார்

இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரியாக இருந்துவரும் வின்ஸ்டன் சர்ச்சில் தம் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டார். இவருக்கு எண்பது வயது முடிந்துவிட்டது. இவர் எட்டு வருஷம் எட்டு மாதங்கள் பிரதம மந்திரி பதவி வகித்திருக்கிறார். பல நூல்களை எழுதியிருக்கிறார். இலக்கியத்துக்காக நோபெல் பரிசு பெற்றிருக்கிறார். இவருடைய வலது கை போன்றவர் அந்தோணி ஈடன். அவரே இப்போது பிரதம மந்திரி.

## அடையாறு ஒளவை இல்லம்

அடையாற்றிலுள்ள ஒளவை இல்லத்துப் பாடசாலைகளின் 15-ஆவது ஆண்டு விழா ஏப்ரல் 13, 14 தேதிகளில் நடைபெறுகிறது. டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்கள் முயற்சியில் நடைபெறும் இந்த இல்லத்துப் பாடசாலைகளை ஸ்ரீமதி சரஸ்வதி ஸ்ரீநிவாஸன் கண்போல் பாதுகாத்துத் திறம்பட நடத்திவருகிறார். இந்த இல்லத்தின் கலாசாரக் குழுவினர் பிரதிக்ஞை என்ற நாடகத்தை நடித்துக் காட்டுகிறார்கள்.

# கண்ணன்

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
12 MAY 1955

## பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 8

15-4-'55

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| புதிய வருஷம் | .. | 3 |
| லீடர் மணி | .. | 4 |
| பாரஸீக ரோஜா | .. | 9 |
| கேளுங்கள் சொல்கிறேன் | | 11 |
| மறைந்த மோதிரம் | .. | 13 |
| பாலர் கவியரங்கம் | .. | 16 |
| பட்டுப் பாவாடை | .. | 17 |
| விலை | .. | 20 |
| வெகுமதி | .. | 21 |
| டைரி சொல்லும் கதை | .. | 24 |
| மேன்மை உள்ளம் | .. | 29 |
| கணக்கு விவகாரம் | .. | 33 |
| பொழுது போக்கு | .. | 38 |
| எங்கள் பகுதி | .. | 39 |

செய்திகள் - 2 - அட்டை
அதிருஷ்ட எண்கள்-3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 15-3-55

### அதிருஷ்ட எண்கள்

| | | | |
|---|---|---|---|
| முதற் பரிசு | | .. | 12123 |
| 2-ம் பரிசு | | .. | 5111 |
| 3-ம் பரிசு | 1. | .. | 9245 |
| | 2. | .. | 481 |
| | 3. | .. | 12472 |
| 4-ம் பரிசு | 1. | .. | 1880 |
| | 2. | .. | 12221 |
| | 3. | .. | 11978 |
| | 4. | .. | 837 |
| | 5. | .. | 13365 |

மார்ச்சு 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் இதழிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினுல் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

கண்ணன் குழந்தைகள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புது வருஷத்தில் உங்களுக்குப் பல வெற்றிகளும் புகழும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இந்தப் புத்தாண்டு தினத்தன்று கண்ணனின் அதிருஷ்டப் பரிசு பெற்ற பத்து எண்களை முன் பக்கத்தில் வெளியிட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு மாதமும் பத்துப் பத்துக் குழந்தைகள் வீதம் இருபது பேர்கள் பரிசு பெறப் போகிறீர்கள். இந்தத் திட்டத்தின்படி கண்ணன் வாங்கும் எல்லாக் குழந்தைகளுக்குமே பரிசு பெறச் சந்தர்ப்பம் இருக்கிறது. நீங்கள் காசு கொடுத்துக் கண்ணன் வாங்குகிறீர்கள். கண்ணன் அதற்குப் பதிலாக உங்களுக்கு ஏதாவது வாங்கித் தரவேண்டாமா? அதனுல்தான் ரொக்கப் பரிசாக வாங்கிக் கொடுக்க முன் வந்திருக்கிருன். ஒவ்வோர் இதழிலும் 3 - ஆம் அட்டையில் இந்த எண் வெளியாகிறது. அந்தக் கண்ணனையெல்லாம் பத்திரப்படுத்தி வைத்திருங்கள். தொலைத்துவிட்டுப் பரிசு எண்கள் வெளியானவுடன் விழிக்காதீர்கள்.

இந்தக் கோடை விடுமுறையில் உங்களுக்கு எத்தனையோ அவகாசம் கிடைக்கும். அந்த நேரத்தை நீங்கள் வீணுக்கிவிடாதீர்கள். நான் முன்பே ஒரு விஷயம் அறிவித்திருக்கிறேன். அதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். தொடர் கதையைப்பற்றித்தான் சொல்கிறேன். நன்ருகச் சிந்தியுங்கள்; உங்கள் மனத்திலேயே ஒரு நல்ல கதையாக உருவாக்கிக் கொள்ளுங்கள். பிறகு அதைக் குறித்துக் கொள்ளுங்கள். அப்புறம் தினம் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் உட்கார்ந்து கதையை ஜோடித்து எழுதுங்கள். இரண்டு மாதங்களில் ஒரு நல்ல தொடர் கதையை நீங்களே சொந்தமாக எழுதிவிடலாம். ரொம்ப ரொம்பப் பெரிய கதையாக எழுதவேண்டும் என்பதில்லை. கண்ணன் பத்திரிகையில் 35 பக்கங்களுக்குமேல் 60 பக்கங்களுக்குள் வந்தால் போதும். எழுத்தைத் தெளிவாக எழுதுங்கள். ஒரே பக்கத்தில் மட்டும் எழுதுங்கள். பென்சிலால் எழுதி விடாதீர்கள்; மசியினுலேயே எழுதுங்கள். அவசரமில்லாமல் நிதானித்து, உங்கள் கற்பனையைச் செலுத்தி எழுதுங்கள். எழுதின பிறகு ஜூலை 15 - ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். கதை உங்களுடைய சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும். உங்களுடைய சொந்தக் கையெழுத்தில் எழுதியிருக்க வேண்டும். பிறருடைய உதவியின்றி நீங்களே எழுதினதாக இருக்கவேண்டும். எழுதிப் பழகுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

நீங்கள் எழுதியனுப்பும் தொடர்கதைகளைப் பரிசீலனை செய்யப் பஞ்சாயத்தார்கள் நியமிக்கப் படுவார்கள். அவர்களுடைய பெயர்களை விரைவில் வெளியிடுகிறோம். இந்தத் தொடர்கதைப் போட்டிக்கு வரும் சிறந்த கதையைக் கண்ணனில் வெளியிட்டு, பிறகு புத்தகமாகவும் போடப்போகிறும். தொடர்கதையாக வரும்போதும் புத்தகமாக வரும் போதும் தனித் தனியே உரிய சம்மானம் வழங்கப்படும். எழுதும் திறமை உள்ள குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கண்ணனில் புதிய தொடர்கதையை நீங்கள் விரைவில் எதிர் பார்க்கலாம். இது பற்றிய விவரங்களை அடுத்த இதழில் தெரிவிக்க எண்ணுகிறேன்.

—ஆசிரியர்.

# புதிய வருஷம்

'ஜோதி மாமா'

வேப்பம் பூ மணக்குது
வெல்லமும் மணக்குது
ஏப்பம் விட்டே உண்ணும்விருந்தும்
எங்கணும் மணக்குது.

வசந்த காலம் வந்தது
மலர்களும் மலர்ந்தன
கசந்த வாழ்வும் வளமைபெற்றுக்
கரும்பு போல இனிக்குது.

புதிய வருஷம் பிறந்தது
புதிய ஊக்கம் மலர்ந்தது
புதிய புதிய முயற்சிதன்னில்
புகுந்து வெற்றி காணுவோம்.

எங்கும் புதுமைக் காட்சியே
எங்கும் மரங்கள் தழைத்தன.
பொங்கும் மங்கள மெங்குந்தங்கிடப்
போற்றி செய்வோம் கடவுளை.





# லீடர் மணி

'ஆர்வி'

வஸந்தி, அவளுடைய தந்தை, கண்ணப்பன் ஆகிய மூவரும் போர்ட்டிகோவுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். சந்துருவையோ அவன் அம்மாவையோ அங்கே காணவில்லை. மணிக்குக் காலே எழும்பவில்லை.

"அடே பையா! இங்கே வா!" என்றார் வஸந்தியின் அப்பா. அவர் கூப்பிட்டதே மணிக்கு வயிற்றைக் கலக்கியது. மெதுவாக எப்படியோ அவர்களுக்கு எதிரில் போய் நின்றான்.

"உம்; ஆளைப் பாத்தா பூனை போல்தான் இருக்கான். சரி, முதல்லே போய் வஸந்தியின் மலாயாப் பொம்மையை எடுத்துக் கொடு. அப்புறம் உங்கிட்டே பேசிக்கறேன்" என்றார் அவர்.

மணிக்குச் சொரேர் என்று இருந்தது. அவன் மிகவும் பரிதாபமாகக் கண்ணப்பனைப் பார்த்தான். அவனுக்கு ஏதாவது விஷயம் தெரியுமோ என்று கேட்டது அவன் பார்வை.

"என்னடா முழிக்கிறே? நான் சொல்றேன், என்னமோ அவனைப் பாக்கறே. என்னைப் பாக்கறே! எப்படியிருக்கு உடம்பு?" என்று அதட்டல் போட்டார் வஸந்தியின் அப்பா.

கண்ணப்பனே மணிக்குத் தைரியம் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. அவன் தலையைக் குனிந்து கொண்டு நின்றான். வஸந்தி மணியை ஏளனமாகப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

மணிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பேச்சும் கிளம்பவில்லை. பிறகு எப்படியோ தட்டித் தடுமாறிக்கொண்டு, "எனக்கு ஒண்ணும் தெரியாதே. நான் ஒரு பொம்மையும் பார்க்கலியே!" என்றான்.

"பார்க்கல்லியா? ஓஹ்ஹோ! பின்னே அந்தப் பொம்மை எங்கே போச்சு?"

"எனக்குத் தெரியாது, ஸார்! நான் எடுக்கவேயில்லை, ஸார்!"—இவ்விதம் சொல்லும்போதே மணிக்குத் தொண்டையை அடைத்தது.

"டேய், என்ன இது! கேக்கறதுக்கு முன்னாடியே உனக்கு அழுகை பொத்துக்கொண்டு வறதே! மடியிலே கனமில்லாதவனுக்குப் பயம் எப்படிடா உண்டாகும்? அப்போ நீயாக மரியாதையாகக் கொண்டுவந்து கொடுக்கமாட்டே, இல்லே?"

"நான் வந்து..பிராமிஸா.."

"சட்! நிறுத்துடா! முளைச்சு முளை வரல்லே, அதுக்குள்ளே 'பிராமிஸ்' என்கிறான். 'பிராமிஸ்' என்றால் என்ன அர்த்தம் தெரியுமாடா உனக்கு?"

மணி அருண்டுபோய் நின்றான். பதில் சொல்வதைவிட வாயை மூடிக்கொண்டிருப்பதே சிறந்ததாகப் பட்டது அவனுக்கு. இந்தச் சமயம் பார்த்துக் கண்ணப்பன்,

"இந்தப் பையன் எடுத்ததாகத் தெரியல்லீங்க. ஏன்னு எங்கிட்டே தான் இது பேசிக்கிட்டிருந்தது!" என்றான். அவன்மட்டும் இப்படிச் சொல்லாமல் போயிருந்தால் மணியின் பாடு மிகவும் திண்டாட்டமாகப் போயிருக்கும். அதற்குப் பிறகுதான் வஸந்தியின் அப்பாவுக்குக் கோபம் சிறிது தணிந்தது. இருந்தாலும் அவர், "பொம்மை கிடக்கட்டும். இன்னும் ஏன் இந்தப் பையன் தன் வீட்டுக்குப் போகாமல் இருக்கிறான்? யார் வீட்டுப் பையன் இவன்? வந்து மூணு நாளுக்குமேல் இருக்கும் போலிருக்கே?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனார்.

மணிக்கு இப்போதுதான் போன உயிர் திரும்பி வந்தது. அவனுக்கு அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. பூமி, ஆகாசம் எல்லாமே கிர் கிர்ரென்று தலைகீழாகச் சுற்றுவதுபோலிருந்தது. அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கண்ணப்பன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். "கண்ணப்பா!" என்று சொல்லிவிட்டு, வெடிப்பதுபோல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கிவிட்டான். கண்ணப்பன் கையெல்லாம் அவனுடைய சோகக் கண்ணீரால் நனைந்துவிட்டது.

கண்ணப்பன் அவனை ஆதரவுடன் அணைத்துக்கொண்டு, "தம்பி! போனால் போகுது, அழாதே. ஆண்டவன் இருக்கார்!" என்று தேறுதல் கூறிப் பார்த்தான். மணியின் விம்மல் அதிகமாகியதே தவிர அடங்க மறுத்துவிட்டது.

கண்ணப்பன் அவனை மெல்லக் கார் ஷெட்டுப் பக்கம் அழைத்துச் சென்றான். மணி பாதி தூரம் சென்றதுமே நின்று, "கண்ணப்பா நான் அங்கே இனிமே வரலே. நான் இப்படியே திரும்பிப் போறேன். சந்துருகிட்டேயும் அவன் அம்மாகிட்டேயும் சொல்லிடு" என்று கூறினான்.

"ஆமாம்—எங்கே போகப் போறே?"

"எங்கேயிருந்து வந்தேனே, அங்கே போறேன்."

"அப்படின்னா?"

"எங்கேயாவது போறது!"

"இந்த இருட்டிலேயா போகப் போறே?"

"இனிமே இங்கே எப்படி யிருக்கிறது, கண்ணப்பா?"

கண்ணப்பன் சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு, "தம்பி! நீ சிறுபிள்ளைத்தனமாகப் பேசறே. சந்துருகிட்டே ஒரு வார்த்தை சொல்லாமல் போறது சரியில்லே. அவங்க அம்மாவையும் பார்த்து ஒரு பேச்சுச் சொல்லாமல் போறது சரியில்லே. நல்லா யோசனை செய்து பாரு. அதையும் தவிர நீ சிறுபிள்ளை. இதுவோ பட்டணம். ராத்திரியிலே நடு ரோட்டிலேயா போய் நிக்கிறது?" என்று மணியின் மனசில் படும்படி எடுத்துச் சொன்னான். மணியும் நிதானமாக நின்று கேட்டுக்கொண்டான். இவ்வளவு நேரம் வாசலில் வஸந்தி நின்று கேட்டுக்கொண்டிருப்பதை அவர்கள் இருவரும் கவனிக்கவேயில்லை. அவளுடைய அப்பாதான் உள்ளே போனாரே தவிர, அவள் அங்கேயேதான் நின்றுகொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் பேசியது அவளுக்கு நன்றாகக் கேட்டது. அவள் இப்போது, "அப்பா! அப்பா! அந்தப் பையன் போறேன் என்கிறான். கண்ணப்பன் பிடித்து நிற்க வச்சு, போகாதே என்கிறான் அப்பா!" என்று இரைந்து கூவினாள்.

மணியும் கண்ணப்பனும் இந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். "அட தெய்வமே! இந்தப் படுசுட்டி இங்கேயா இவ்வளவு நேரமும் நிக்குது. ஒண்ணு கிடக்க ஒண்ணைச் சொல்லி வம்பு பண்ணிடப் போறதே இது!" என்று கண்ணப்பன் திகிலடைந்தான்.

"அதனால்தான் சொல்கிறேன். நீ கையைவிடு. ஆவது ஆகட்டும். நீ நடந்ததை அப்படியே சந்துரு வந்தால் சொல்லிவிடு. நான் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு, மணி தன் கையை விடுவித்துக்கொண்டு இருளில் பாய்ந்தான்.

"தம்பி! விஜயராமன் தெரு, நம்பர் 11. நேரே அங்கே

போயிடு!'' என்று கண்ணப்பன் சொல்லிக்கொண்டே யிருந்தான். மணியின் காதுகளில் அவன் சொன்னது கேட்டதோ என்னவோ, அவன் வாசலைத் தாண்டிப் போய்விட்டான். அவனுக்கு என்ன மூட்டையா முடிச்சா? கையை வீசிக்கொண்டு நடக்க வேண்டியதுதானே?

கண்ணப்பனுக்கு வருத்தம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. அவன் யாரோ, மணி யாரோ? இருந்தாலும் அவனுடைய சொந்தத் தம்பியே அநாதரவாகப் போவது போல அவனுக்கு இருந்தது. அவனால் அவனுக்கு எந்த விதத்திலும் உதவி செய்ய முடியவில்லை. பங்களாவை விட்டுப் போய்ப் பார்ப்போம் என்று அவன் எண்ணியபோது, ''எங்கேடா அந்தப் பையன்? போகிறேன் என்கிற பையனை ஏன் தடுத்துவைக்கிறாயாம்? அவன் வீட்டில் தேடினால் நீ போய், பதில் சொல்வாயா? அவன் வீட்டுக்கு அவன் போகிறான். அதை ஏன் நீ மறிக்கிறாய்?'' என்று அதட்டிக் கொண்டே வஸந்தியின் அப்பா மீண்டும் வாசலுக்கு வந்தார். கண்ணப்பன் ஏதோ பதில் சொல்ல எண்ணினான். ஆனால் ஏனோ அதைச் சொல்வது சரியல்ல என்று நிறுத்தி விட்டான்.

''எங்கேடா அவன், போயிட்டானா?''

''போயிட்டுது ஸார்!'' இந் நேரம் தெரு திரும்பியிருக்கும் ஸார்!'' என்றான் கண்ணப்பன்.

''இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான். பழகுகிற வீட்டிலேயே அகப்பட்டதைச் சுருட்டுகிறது. இனிமே எதுக்காக இருக்கான் அவன்? திருட்டுத்தான் வெளிப்பட்டுவிட்டதே!'' என்று சொல்லிவிட்டு அவர் சோபாவில் போய் உட்கார்ந்து கொண்டார்.



கண்ணப்பனுக்கு இன்னும் வேலை முடியவில்லை. எட்டரை மணிக்குத்தான் அவன் வீட்டுக்குக் கிளம்பவேண்டும். இன்று சந்துருவின் அம்மா லேடீஸ் கிளப்புக்குப் போயிருந்தாள். அவளை அழைத்து வர வண்டியைக் கொண்டுபோக வேண்டும். அதனால் கண்ணப்பன் அங்கிருந்து போய்விட்டான்.

''கிணிங் கிணிங்'' என்று சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. கண்ணப்பன் வண்டி வாசலைத் தாண்டுவதும் சந்துருவின் சைக்கிள் எதிரே வருவதும் சரியாக இருந்தன. கண்ணப்பன் சட்டென்று பிரேக்கைப் போட்டு வண்டியை நிறுத்தி, ''தம்பி! ஒரு சேதி! அந்தப் பையன் மணி போயிட்டுது. போய் அரை மணி இருக்கும். நான் வந்து சொல்றேன் பாக்கியை'' என்று வண்டியை மிதித்தான்.

சந்துருவுக்கு ஷாக் அடித்தது போலிருந்தது. தரையில் ஊன்றிய காலை எடுத்து, தயக்கத்துடனேயே மிதித்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். வாசலிலேயே அப்பா உட்கார்ந்திருந்ததால் அவனுக்கு மனசு படபடவென்று அடித்துக் கொண்டது. ரொம்பவும் சாதுபோல் சைக்கிளை வராந்தாவில் நிறுத்திவிட்டு உள்ளே போய் விட்டான். நல்ல வேளை; அவர் ஒன்றும் அவனைக் கேட்கவில்லை.



தன்னுடைய அறைக்குள் மணி ஏதாவது கடிதம் எழுதி வைத்திருக்கிறானா என்று ஆராய்ந்து பார்த்தான், ஒன்றும் காணோம். வஸந்தியைக் கூப்பிட்டுக் கேட்போம் என்றால் வேறு வினையே வேண்டியதில்லை. வம்பை விலைக்கு வாங்குகிற மாதிரிதான். அவனுக்கு மட்டும் மணி வீட்டைவிட்டுப் போனதற்கு அவள்தான் காரணமாக இருக்கும் என்று பட்டுவிட்டது. அப்படி என்ன நடந்ததோ, என்ன ஆச்சோ என்ற கவலை அவனைக் குடைந்துகொண்டேயிருந்தது. உள்ளே இருப்புக் கொள்ளாமல் சங்கடப்பட்டான்.

அவனுடைய அம்மா வந்து விட்டாள். அவள் முகத்திலும் கவலைக் குறி தாண்டவமாடியது. வரும்போது கண்ணப்பன் அவளிடம் நடந்தது எல்லாவற்றையும் சொல்லியிருப்பான் என்றே பட்டது. ஆனால் அதை எப்படி உடனே கேட்டுத் தெரிந்துகொள்வது?

கண்ணப்பன் கார் ஷெட்டைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டுவிட்டான். அதற்குள் அவனைச் சந்திப்போம் என்றால் அப்பா இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை. அதனால் முடியாமல் போய்விட்டது. கண்ணப்பனும் போய் விட்டான்.

வஸந்தி அம்மாவைப் பார்த்து, ''அம்மா, அம்மா! அந்தப் பையன் போயிட்டான், அம்மா!'' என்றாள்.

''சரி, போனால் போகட்டும்'' என்று அலட்சியமாகச் சொல்வது போல் சொல்லிவிட்டுப் போனாள். அப்பா மட்டும் அங்கே இல்லாமல் இருந்திருந்தால் வஸந்தியின் தலையில் நறுக்கென்று ஒரு குட்டு விழுந்திருக்கும்.




எல்லாரும் சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள். ஒருவருக்கு ஒருவர் கலகலப்பாகப் பேசிக்கொள்ளவில்லை, அப்போது அடுத்த வீட்டுப் பெண் மாலதி, ''வஸந்தி! வஸந்தி!'' என்று கூப்பிட்டுக்கொண்டே வருவது தெரிந்தது,

''சாப்பிடறேன் மாலதி. உள்ளே வாயேன்'' என்றாள் வஸந்தி.

மாலதி உள்ளே வந்தாள். தலையை நீட்டிப் பார்த்துவிட்டு, ''ஒண்ணுமில்லே, வஸந்தி. இதை எங்க வீட்டிலேயே வச்சுட்டு வந்துட்டியே. அதைக் கொடுத்துட்டுப் போறதுக்குத்தான் வந்தேன்'' என்று தன் கையிலிருந்த மலாயாப் பொம்மையைக் கொடுத்தாள்.

''ஐயையோ, இதை உங்க வீட்டிலேயா வச்சுட்டு வந்திட்டேன்?'' என்று கூறினாள் வஸந்தி.

''அந்தப் பையன் எடுத்துட்டான்னியே!'' என்றார் அப்பா.

''அவள் வழக்கமே இது தானே!'' என்று ஆத்திரத்தையெல்லாம் அடக்கமாட்டாமல் கூறினான் சந்துரு.

''சரிதாண்டா. நீ ரொம்ப ஒழுங்கு. சாப்பிடுடா!'' என்று கூறினார் அப்பா.

''கோழிச் சொல்றதைத் தவிர வேறே வேலை?'' என்று சந்துரு முணுமுணுத்தான். (தொடரும்.)


கப்பல் சேதமாகி விட்டது!
கப்பலுக்குள் தண்ணீர்
அதோ பாய்மரம் கிழிந்து விட்டதே!
எல்லாரும் தப்பித்துக் கொள்ளுங்கள்! கடலில் குதியுங்கள். கப்பல் மூழ்குகிறது!
அல்லாவே துணை! எல்லாரும் குதியுங்கள். நான் இதைவிட்டு உயிர் போனாலும் அசையப் போவதில்லை!
இனி உயிருக்கே ஆபத்து!
இங்கே இப்படியிருக்க, சமுத்திரக் கரையில் என்ன நடந்ததென்று பார்ப்போம். காமரின் உடல்நிலையை முன்னிட்டு, கலீபா தம் பரிவாரங்களுடன் அங்கே வந்து தங்கியிருந்தார்.
மந்திரியே! காமருக்கு இப்போதாவது குணமாகாதா?
ஆகும் என்று தான் நம்புகிறேன்!
ஆனால் இந்தப் புயல் இப்படிக் கோரமாக வீசுகிறதே!
அதோ! நடுக்கடலில் ஒரு கப்பல்! புயலில் தத்தளிக்கிறது!


மாமன்னரே! புயலில் ஒரு கப்பல்! கடலில் மூழ்கும் நிலையில் இருக்கிறது!
கப்பலா? மந்திரி! போய் அதைக் கவனியும்!
கட்டு மரங்களில் புறப்படுங்கள். உயிர்களைக் காப்பாற்றிக் கரை சேருங்கள்!
கீழே குதித்துவிடு!
ஆ! அல்லா!
தண்ணீரில் குதித்தவனை எங்கே காணும்?
தேடுங்கள்! விடாதீர்கள்!

(தொடரும்)

# கேளுங்கள், சொல்கிறேன்!

பேராசிரியர் விஞ்ஞானம்

**கே. எஸ். தங்கமணி, கருப்பூர்.**

இடிக்கும் மின்னலுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? இடியினால் பெரிய மாடிக் கட்டடங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? மின்னல் எவ்வாறு உண்டாகிறது?

எண்ணிறந்த, மிகச் சிறு நீர்த்துளிகளின் கூட்டங்கள் அல்லது தொகுதிகளே மேகங்களாக அமைகின்றன. அவை மிக மெல்லியவையாக இருக்கும்போது வானத்தில் அதிக உயரத்தில் இருக்கும். சில துளிகள் ஒன்று சேர்ந்து சற்றே பெரியவையானால் அவை தாழ்ந்து, கீழே இறங்கும்; அங்கு வீசும் காற்றினால் நாற்புறமும் எடுத்துச் செல்லப்படும்; காற்று மேல் நோக்கி வீசும்போது மேலே ஏறிச் செல்லும்.

இப்படி இங்கும் அங்குமாகப் பல திசைகளிலும் செல்லும் நீர்த்துளிகள் அங்கே இருக்கும் காற்றின் மீது உராய்கின்றன. அப்படிப்பட்ட உராய்வினால் அவைகளில் மின்சார ஏற்றம் உண்டாகிறது. சிற்சில பொருள்கள் ஒன்றோடொன்று உராய்ந்தால் மின்சார ஏற்றம் ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரியும், அல்லவா?

இப்படி மின்சார ஏற்றத்தைப் பெறும் மேகங்கள் சிலவற்றில் நேர் மின்சாரம் (Positive electricity) ஏறுகிறது. வேறு சில மேகங்களில் எதிர் மின்சாரம் (Negative electricity) ஏறுகிறது..

நேர்மின்சார ஏற்றம் உடைய ஒரு மேகமும், எதிர் மின்சாரத்தை உடைய ஒரு மேகமும் ஒன்றையொன்று அணுகி, சிலவேளைகளில் நெருங்குகின்றன. அப்போது எதிர்மின்சாரம் ஏறிய மேகத்திலிருந்து அந்த மின்சாரமானது சட்டென்று, மிக விரைவாக நேர் மின்சாரம் ஏறிய மேகத்துக்குப் பாய்கிறது. இப்படி அந்த மின்சாரம் மிக விரைவாகக் காற்றின் ஊடாகப் பாயும்போது, மிகுந்த வெப்பம் உண்டாகிறது. அந்த எதிர் மின்சாரம் ஊடுருவிச் செல்லும் காற்றை மிகமிக வெப்பமுறச் செய்கிறது. அருகிலுள்ள காற்றும் அந்த வெப்பத்தால் தீப்பற்றி எரிகிறது; மிகப் பிரகாசமாக ஜொலிக்கிறது. இப்படிப் பட்ட பிரகாசமான ஜொலிப்பையே நாம் மின்னல் என்று சொல்லுகிறோம்.

எதிர் மின்சாரம் பாய்வதால் ஜொலிக்கும் வாயுவானது எரிந்து போய், சில ரசாயனக் கூட்டுப் பொருள்களாக (Chemical compounds) மாறுகிறது. எரிந்து போன காற்றோடு ஒப்பிடும்போது இந்தப் பொருள்கள் மிகச் சிறு இடத்தையே நிரப்பி யிருக்கும். ஆதலால், மின்னல் பொறியைச் சுற்றியுள்ள இடத்தில் ஒரு வெற்றிடம் (Vacuum) இயற்றப் படுகிறது. இந்தக் காலியிடத்தை நிரப்புவதற்கு அதைச் சுற்றி நானா பக்கங்களிலுமிருந்து, காற்று பாய்ந்தோடி வருகிறது. இப்படிக் காற்று விரைந்தோடி வந்து மோதுவதால், மிகப் பெரிய ஓசை உண்டாகிறது. இது வெகு தூரத்துக்கு அப்பாலும் கேட்கப்படுகிறது. இதையே நாம் இடியென்றும், இடியோசை யென்றும் சொல்லுகிறோம்.

சில வேளைகளில் நீர்த்துளிகள் நிரம்பிய மேகம் அதிக மின்னேற்றத்தைப் பெற்றிருக்கும். அப்படிப் பட்ட மேகம் பெரிய கட்டடங்களுக்கு உயரவாவது, பெரிய மரங்களுக்கு உயரவாவது சற்றே அருகில் வரக்கூடும். அப்படி வரும்போது அதில் ஏறியிருக்கும் மின்சார ஏற்றம் சட்டென்று கட்டடத்தின் மீதோ, மரத்தின்மீதோ ஒழுகக் கூடும். அப்போது உண்டாகும் மின்னல்பொறி கட்டடத்தின் வழியாகப் பாயலாம். அப்படிப் பாய்ந்தால், ஒரு நொடியில் அதைப் பொசுக்கி அழித்துவிடும்.

**மதுரை கே. சதாசித்தின்**

—'வானிலிருந்து இடி, மின்னல் ஏற்படுவதன் காரணம் என்ன? எங்கிருந்து ஏன் இவை உண்டாகின்றன?' என்ற கேள்விக்கும் விடை இதுதான்.

**எம். வாசுதேவன், கிருஷ்ணகிரி.**

**கா**ந்தம் என்பது என்ன? அது எப்படி உண்டாகிறது?

**கா**ந்தம் என்பது கவர்ச்சியுடைய ஒரு வகைப் பொருள் என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனால் இது போதாது.

ஒரு காந்தத்துக்கு இரண்டு முக்கிய குணங்கள் இருக்கின்றன.

(1) காந்தத்தை ஒரு கட்டை வடிவமாக அமைத்துக் கிடைப் போக்கில் தொங்க விட்டால், அதன் இரண்டு கோடிகளும் வடக்கும் தெற்குமாகக் காட்டிக் கொண்டு நிற்கும்.

(2) காந்தத்தின் இரண்டு கோடிகளும் இரும்பு போன்ற உலோகத்தின் துண்டுகளைக் கவரும்,

இரும்பு என்பது காந்தத் தன்மை (Magnetic) உடைய ஒரு பொருள். ஏனென்றால், இரும்புக் கட்டைகள் சட்டங்கள் முதலியவற்றைக் காந்தத் தன்மையுடையவையாகச் (காந்தங்களாகச்) செய்ய முடியும். ஓர் இரும்புக் கட்டையைக் காந்தத் தன்மை உடையதாகச் செய்வதற்கு அதைச் சுற்றிச் சுற்றி ஒரு பலத்த மின்சார ஓட்டம் நிகழச் செய்ய வேண்டும். இதற்கு வேறு வழிகளும் உண்டு; ஆனால் இதுவே காந்தத் தன்மை உண்டாக்குவதற்கு மிகச் சிறந்த வழி.

சாதாரண இரும்புத் துண்டில் எண்ணிறந்த மிக நுண்ணிய காந்தங்கள் அடங்கி யிருக்கின்றன. ஆனால் அவை அதற்குள் யாதொரு ஒழுங்கும் இன்றி கூட்டங் கூட்டமாகக் கிடக்கின்றன. வெவ்வேறு திசைகளை நோக்கியும் காட்டிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் அந்த நிலையில் அந்த இரும்புக் கட்டையில் காந்தத் தன்மை இருப்பதாகத் தெரிவதில்லை.

ஆனால் அந்த இரும்புக் கட்டையைச் சுற்றிப் பலமான மின்சார ஓட்டம் நிகழும்படிச் செய்தால், அதற்குள் அடங்கிக் கிடக்கும் சின்னஞ்சிறு காந்தங்கள் எல்லாம் ஒரே திசையாகத் திரும்பி, ஒழுங்காக அமைகின்றன. பல துளி பெரு வெள்ளம் ஆவது போல் நுண்ணிய காந்தங்கள் எல்லாம் ஒழுங்காக அமைந்ததும் அந்த இரும்புக் கட்டை காந்தம் உடையதாக ஆகிவிடுகிறது.

**முந்துக்குமாரசாமி, சென்னை-3.**

**ரெ**யில் எஞ்ஜினில் எவ்வாறு வேகத்தைக் குறைக்கவோ, அதிகரிக்கவோ முடிகிறது? அதற்குரிய கருவிகள் யாவை?

**எ**ஞ்ஜினில் பாய்லர் (Boiler) என்னும் கொதி கலத்தில் நீராவி உண்டாக்கப்படுகிறது. அதை மிகவும் அழுத்தமுறச் செய்து ஒரு சிலிண்டருக்குள் (Cylinder) செலுத்துகிறார்கள். சிலிண்டருக்குள்ளே ஒரு பிஸ்டன் இயங்குவதால், எஞ்ஜினின் சக்கரம் சுழலுகிறது.

பிஸ்டன் எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக இயங்குகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு வேகமாகச் சக்கரம் சுழலும், ரெயிலும் ஓடும். ஆகையால் சிலிண்டருக்குள் இயங்கும் பிஸ்டனின் வேகத்தைத் தக்கபடி குறைத்தால், அல்லது கூட்டினால், ரெயில் எஞ்ஜினின் வேகம் குறையும் அல்லது கூடும்.

எஞ்ஜினின் கொதிகலத்திலிருந்து சிலிண்டருக்கு நீராவியை எடுத்துச் செல்லும் குழாயில் ஒரு வால்வு (Valve) வைக்கப்பட்டிருக்கும். வால்வு என்பது ஒரு புறம் மட்டுமே பொருளைச் செல்லவிடும் கதவைப் போன்ற அமைப்பு. இந்த வால்வைத் தக்கபடி வேலை செய்வதற்கு வால்வுச் சுட்டம் (Valve Rod) என்ற ஒரு கருவி இருக்கிறது.

இந்தக் கருவியை வேண்டியபடி எஞ்ஜின் ஓட்டி (Engine Driver) கையாளுகிறார். சிலிண்டருக்குள் பாய்ந்து வரும் நீராவியை அதன் மூலமாக நியமப்படுத்துகிறார். அதிக நீராவி உள்ளே வரும்படி புகவிட்டால், பிஸ்டனை அது சட்டென்று தள்ளும்; பிஸ்டன் வேகமாக இயங்கும்; சக்கரம் வேகமாகச் சுழலும்; ரெயிலும் வேகமாக ஓடும்.




**ஜோதிர்லதா கிரிஜா**

அலமாரியைத் திறந்தார் சதானந்தம். கல்யாணத்துக்கு என்று வாங்கியிருந்த விலையுயர்ந்த நகைப் பெட்டியைத் திறந்து பார்த்த அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. எல்லா நகைகளிலும் மிகவும் விலை அதிகமான வைரக்கல் பதித்த மோதிரத்தை நகைப்பெட்டியில் காணவில்லை.

அன்று கல்யாணத்துக்கு முதல் நாள். அதாவது மாப்பிள்ளை அழைப்பு நாள். மறுநாள் பொழுது விடிந்தால், மாப்பிள்ளையின் விரலில் அந்த மோதிரம் இருக்கவேண்டும்.

மோதிரம் வாங்கியிருப்பதும் அதன் விலையைப்பற்றியும் அந்த வீட்டில் வேலையாள் சோலையாண்டி, சதானந்தத்தின் தம்பி ஆகியோரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. அவருக்குத் தெரிந்த வரையில், தம்பி ரொம்ப நல்லவன். சோலையாண்டியோ தன் எஜமானுக்காகத் தோலை உரித்துச் செருப்புத் தைத்துக் கொடுக்கவும் தயாராய் இருக்கும் நன்றியுள்ள ஊழியன். ஆனால், இவர்களில் ஒருவர்தான் மோதிரத்தை எடுத்திருக்க வேண்டும். வேறு யாரும் எடுத்திருக்கவே முடியாது. ஏனென்றால், வேறு யாருக்கும் தான் தெரியாதே!

யாரைச் சந்தேகிப்பது என்று சதானந்தத்துக்கு விளங்கவில்லை. அவர் திகைத்துப்போய்த் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்

கார்ந்திருந்தபோது, அவருடைய மகன் மாதவன் அறையினுள் நுழைந்தான். பிள்ளையைக் கண்டதும் தன் தலையிலிருந்த கையை எடுத்த சதானந்தம் எப்போதும் போல் சகஜமாகத் தம் முகத்தை வைத்துக்கொண்டார்.

ஆனால் மாதவனின் துருதுருத்த விழிகளை ஏமாற்ற முடியுமா? தன் அப்பாவின் முகத்தைக் கவலைக் கோடுகள் அலங்கோலப் படுத்தியிருப்பதை அவன் கண்டு கொண்டான், ''ஏன் அப்பா ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று மெள்ள விசாரித்தான். சதானந்தம் விஷயத்தைச் சொன்னார். தொடர்ந்து, ''நாளைக்குப் பொழுது விடிந்தால் உன் தங்கைக்குக் கல்யாணம். போலீஸுக்கு விஷயத்தைத் தெரிவித்தால், அவர்கள் நம் வீட்டு விருந்தாளிகளையெல்லாம் ஏற்றத் தாழ்வு பார்க்காமல் சோதனை செய்து விடுவார்கள். ரொம்ப அவமானமாகிவிடும். எல்லாருடைய மனக் கசப்பையும் வேறு சம்பாதிக்க நேரும். ஆகையால் போலீஸின் உதவியின்றி எப்படியும் நாளைக் காலைக்குள்ளாவது மோதிரத்தைக் கண்டு பிடித்தாக வேண்டும். இன்னது செய்கிறதென்று எனக்குத் தெரியவில்லை'' என்று அலுத்துக்கொண்டார்.

துப்பறியும் கதைகள் நிறையக் கரைத்துக் குடித்திருந்த மாதவன் அவரைக் கவலைப்படாமல் இருக்கும்படியும் மோதிரத்தைத் தான் கண்டு பிடித்துக் கொடுப்பதாகவும் அப்பாவுக்குத் தேறுதல் கூறினான். தன் அப்பாவின் சந்தேகம், யார் மீது விழுந்திருக்கிறது என்பதையும் கேட்டுத் தெரிந்துகொண்டான்.

'ஏழைகள்தாம் திருடுவார்கள்; பணக்காரர்கள் திருடமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குத் திருடவேண்டிய அவசியமில்லை' என்பது பலருடைய நம்பிக்கை. இந்த நம்பிக்கை மாதவனுக்கும் கொஞ்சம் உண்டு. எனவே அவன் தன் பணக்காரச் சிற்றப்பாவை ஆராய்ந்து பார்ப்பதற்கு முன்னால், வேலைக்காரன் சோலையாண்டியைச் சோதிக்கத் தீர்மானித்தான்.

மாதவன் தோட்டத்துக்குப் போனான். அங்கே சோலையாண்டி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துப் பயிர்களுக்குப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். மாதவன் கிணற்று மேடையில் சாய்ந்து நின்ற வண்ணம் சோலையாண்டியோடு சும்மாப் பேச்சுக் கொடுத்தான். பேசிக்கொண்டிருக்கும் போதே, தான் தயாராக எடுத்து வந்திருந்த பணப்பையைக் கிணற்றடியில் வைத்துவிட்டு நடக்கலானான்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த மாதவன், சோலையாண்டி தன்னை நோக்கி வருவதைக் கண்டான். நேரே மாதவனுக்கு அருகே வந்த சோலையாண்டி, ''தம்பி, உன் அப்பா வேலையைப் பார்த்தாயா? கிணற்றடியில் தலை முழுகி விட்டுப் பணப் பையை அங்கேயே போட்டு விட்டிருக்கிறார். நல்ல வேளையாய்ப் போச்சு'' என்று சொல்லிக்கொண்டே பையை மாதவனிடம் காட்டினான். மாதவன், தானே தவறிப் போய் நழுவவிட்டு விட்டதாயும், அப்பா போடவில்லை என்றும் சொல்லிப் பையை வாங்கிக்கொண்டான். சோலையாண்டி போன பிறகு, மாதவன் பையில் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். ஒரு தம்பிடி கூடக் குறையவில்லை. இவனா திருடியிருக்கப் போகிறான்!

அடுத்தபடி, தன் சிற்றப்பா முத்துவைச் சோதிக்க அறைக்குள் நுழைந்தான். அவன் போனபோது முத்து செய்தித்தாள் வாசித்துக் கொண்டிருந்தார். மாதவனைப் பார்த்ததும் அதை மடக்கி வைத்து விட்டுப் பேச ஆரம்பித்தார். மாதவன், சிறிது நேரங் கழித்துத் தன்னறைக்குச் சென்றான். அந்த அறையின் அலமாரியில் தான் நகைப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. அங்கே அவனுடைய மேஜைக்கருகிலிருந்து குப்பென்று வாசனைத் தைலத்தின் மணம் கமழ்ந்தது. மாதவன் குனிந்து



பார்த்தான். மேஜைக்குக் கீழே சிவப்பு மசி கொட்டிக் கிடந்தது. காவியான வாசனைத் தைல சீசாவில் அவன் சிவப்பு மசியைத் தவறுதலாகக் கொட்டி வைத்திருந்தான். அதனுல்தான் மசி மணம் வீசுகிறது என்று எண்ணினுன். ஆனுல் யார் மசியைக் கொட்டினது?

மாதவன் அதைப்பற்றி அவ்வளவு முக்கியமாக எண்ணுமல் தன் தந்தையின் அறையை அடைந்தான். அங்கே சிற்றப்பாவும் இருந்தார். அவருடைய முழங்கையில் கட்டுப் போட்டிருந்தது. இதை அவன் முன்பே கவனிக்கவில்லை. கட்டுக்கு மேலாக ரத்தம் கசிந்திருந்தது. மாதவனுடைய மூளையில் ஒரு நரம்பு அசைந்து கொடுத்தது. அவன் தன் சிற்றப்பாவுக்கு அருகே நெருங்கி முழங்கைக் காயத்தருகில் முகத்தை வைத்தபடி, ''என்ன சிற்றப்பா காயம்?'' என்றுன். சற்று நேரத்துக்கு முன்னுல் தடுக்கி விழுந்து சிறிது காயம் பட்டுக்கொண்டதாக அவர் பதில் சொன்னுர். ஆனுல் மாதவன் நம்பவில்லை. அந்தக் கட்டிலிருந்து சிவப்பு மசியின் வாசனை வருவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. காயத்திலிருந்து எங்கேயாவது 'சென்ட்' மணம் வருமா?

மாதவன், அவர் கட்டை வெடுக்கென்று அவிழ்த்தான். 'டங்' என்ற ஓசையோடு அதிலிருந்து மோதிரம் கீழே விழுந்தது. உள்ளே ஒரு சின்னக் காயங்கூட இல்லை எல்லாம் வேஷம் சிவப்பு மசியைத் துணியில் தெளித்துக் கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறுர். சதானந்தம் வாயைப் பிளந்தார். சிற்றப்பாவின் முகத்தில் ஈயாடவில்லை. 'குற்றமற்ற சோலையாண்டியின் மீது சந்தேகித்தோமே' என்று நினைத்து வருந்தினுன் மாதவன்.



# பாலர் கவி அரங்கம்

## முழுமதியே

(1) நிலவே! நிலவே! நீவருவாய்.
நீல வானில் நின்றிடுவாய்.
உருண்டை வடிவுடன் ஒளிகாட்டி
உலகம் முழுவதும் சுற்றிடுவாய்.

(2) மாதம் பாதி நாட்கள்நீ
பாதி மறைந்து நின்றிடுவாய்
மாலை நேரம் மதியேநீ
மாண்புடன் தோன்றி மகிழ்விப்பாய்.

(3) குழந்தை சோறு உண்ணவும்நீ
குன்றின் மேலே வந்திடுவாய்
குற்ற மற்ற நின் ஒளியைக்
குழந்தைகள் கண்டிடக் காட்டிடுவாய்.

(4) மாதம் பாதி நாட்கள்நீ
மறைந்தே நின்று வாழ்ந்திடலால்
உன்னைக் காணும் அவாவுடனே
உலக மக்கள் காத்திருப்பர்.

(5) குழந்தைகள் உன்னைக் கூப்பிடநீ
குளிர்ந்த முகமுடன் வந்திடுவாய்
இரவில் இசைவுடன் வெண்கதிரை
இதமுற இங்கே வீசிடுவாய்.

(6) உலகம் எல்லாம் புகழும்நின்
உயர்குணம் என்றும் குன்றுமே
குன்றின் மேலொளிர் விளக்கினைப்போல்
குறையா துயர்ந்தே ஓங்கிடவே!

பா. கௌ. மெய்கண்டான். சென்னை-17.

# பட்டுப் பாவாடை

## நீலா ராமமூர்த்தி

வசந்தா பிடிவாதம் பிடித்து அழ அழ ராஜத்தின் கோபம் அதிகரித்தது. ''பட்டுப் பாவாடை இல்லாததுதான் குறையாயிருக்கு; சாப்பிட்டுப் பிழைத்தால் போதாதா? அதிர்ஷ்டம்தான் நாளுக்கு நாள் ஆருய்ப் பெருகுகிறதே'' என்று இரைந்தாள்.

''குழந்தையை ஒன்றும் சொல்லாதே, ராஜம்'' என்ருன் ராகவன். ''இப்படிச் செல்லம் கொடுத்துக் கொடுத்துதான் குட்டிச்சுவராய்ப் போயிட்டாள் அவள்'' என்ற ராஜம் வசந்தாவை நோக்கி, ''வரயா இல்லேயாடி சாப்பிட?'' என்று அதட்டினுள்.

''பட்டுப் பாவாடைத் தைச்சுக் குடுத்தால்தான் சாப்பிடுவேன்'' என்று வசந்தா வீறிட்டுப் பெரிதாக அழ ஆரம்பித்தாள். ''ஓகோ, அவ்வளவுக்கு ஆயிடுத்தா? பொட்டைக் கட்டைக்குப் பிடிவாதம் வேறயா?'' என்று ஆத்திரமடைந்து நாலு அறை வைத்தாள் ராஜம்.

ஊர் கூடிவிடும் போல் அழுதாள் வசந்தா. ''உனக்கு ஏதாவது புத்தியிருக்கா ராஜம்? நம் நிலேமையை அவள் என்ன கண்டாள், குழந்தை தானே?'' என்ருன் ராகவன். 'குழந்தையை அடித்து விட்டோமே' என்று ராஜத்திற்கே வருத்தமாகப் போய் விட்டது.

பதில் பேசாமல் வசந்தாவைத் தூக்கிக்கொண்டு சமையலறைக்குச் சென்ருள். ''என் வயிறு தேடி ஏன் பிறந்தாய் செல்லமே'' என்று எண்ணி வருந்தியது அவள் மனம். ''சந்திரா கட்டிண்டு இருக்கிற மாதிரி ஒரு பட்டுப் பாவாடை மட்டும் வாங்கிக் கொடும்மா போதும். அப்புறம் கேட்கவே



மாட்டேன்'' என்று விம்மினுள் வசந்தா.

''அவா பணக்காரா. ஆயிரம் தினுசு வாங்குவா, கட்டுவா; நாம் போட்டிப் போட்டால் முடியுமா?''

''முடியும்மா. வாங்கிக் கொடு.''

''ஆமாம், முடியும்; எங்கேயாவது திருடினுல்தான் முடியும். செய்யச் சொல்லட்டுமா?'' என்று சீறினுள் ராஜம். வசந்தாவின் முகம் யோசனையால் சிறுத்தது. ''திருடறதா? ஐயையோ, பாவமாச்சே! அதோட போலீஸ்காரா வேறே புடிச்சிண்டுடுவாளே!'' அடுத்த வீட்டு அம்பி முதல் நாள் விளையாடும்போது சொன்ன சேதி நினைவு வந்தது அவளுக்கு.

''பாவம்டி, வசந்தா! ஒரு பிச்சைக்காரனுக்கு ரொம்பப் பசியாம். யாருமே பிச்சை போடலையாம். கடைத் தெருவில் ஒரு மிட்டாய் கடைப்பக்கம் போனுனும். யாருமே இல்லாமல் திறந்து கிடந்ததால், பசி தாங்காத அவன் மிட்டாயில் துளி எடுத்து மாதிரி பார்த்தானும். திடீரென்று, 'ஐயோ, திருடன், திருடன்' என்ற கூச்சல் பிறந்ததாம் கடைக்குள். அடுத்த நிமிஷமே போலீஸ் உதவிக்கு வந்ததாம். கடைக்காரன் பிச்சைக்காரன் கையைப் பிடித்துக் கொண்டு, ''பாருங்கள் ஐயா இந்த அநியாயத்தை. தினம் தினம் இப்படித்தான் திருடறுன்'' என்றுக் கூச்சலிட்டானும். வந்த யமகிங்கிரர்கள் பசியால் வாடும் அந்த ஏழையை அடித்து உதைத்து, கொண்டுபோய் ஜெயிலிலே அடைத்தார்களாம்.'' அவன் சொன்னதை நினைத்துப் பார்த்ததும் வசந்தாவின் உடல் சிலிர்த்தது; உள்ளம் நடுங்கியது; பயத்தால் பேச நா எழவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ''ராஜம் நான் வெளியிலே போயிட்டு வறேன், கதவைச் சாத்திக்கோ'' என்ற ராகவன் குரல் கேட்டது.

ராஜம் வேலையைப் பார்த்தாள். வசந்தாவும் யோசனையிலாழ்ந்தாள்.

ராகவனுக்குப் 'பில்ஹறு' ஸ்டுடியோவில் வேலை. மாதம் அறுபது ரூபாய் சம்பளம். காபி, டிபன் சாப்பாடு முதலியன அங்கே கிடைத்ததால், பற்ருக்குறை அதிகமாக அவனைப் பாதிக்கவில்லை. நல்ல புத்திசாலியான ராஜமும் கணவனுடைய வருமானத்திற்குத் தகுந்த மாதிரி குடித்தனம் பண்ணினுள்.

தீபாவளி வந்தது. ''போன வருஷம் வாங்கின புடைவை இருக்கு; போதும் எனக்கு. குழந்தைக்குமட்டும் நல்ல சீட்டிப் பாவாடை வாங்குங்கோ'' என்ருள் ராஜம். ''பட்டுப் பாவாடை வாங்கித்தாம்மா'' என்ருள் வசந்தா. ''கோடிவீட்டுக் கோகிலா மாமி பெண் சந்திரா மட்டும் கட்டிக்கொண்டிருக்கிருளே'' என்று சாமானியமாக நினைத்தாள் வசந்தா. அவளுடைய அறியாமையைக் கண்டு சிரித்த ராஜம், ''ஆகட்டுண்டியம்மா; நல்ல காலம் வரட்டும்'' என்ருள். வசந்தாவோ, ''விடேன் தொடேன்'' என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள்.

தீபாவளி நெருங்க நெருங்க வசந்தாவின் ஆசை அதிகரித்தது. சந்திராவும் மறைமுகமாக அவளைத் தூண்டிவிடவே பிடிவாதம் பிடித்து அழ ஆரம்பித்தாள்.

ராகவன் என்ன செய்வான்? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? வசந்தாவுக்காக என்ன பாடு பட்டும் பணம் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு சீட்டிப் பாவாடை தைத்தான். வசந்தாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்திராவைக் கூப்பிட்டுக் காண்பித்தாள். அவளோ, ''என் பட்டுப் பாவாடைதான் ஒசத்தி'' என்று இழிவாகப் பேசிவிட்டாள். வசந்தாவின் குழந்தை உள்ளம் ஏமாற்றத்தால் துடித்தது. அழ ஆரம்பித்துவிட்டாள் நல்ல வார்த்தை சொல்லிச் சொல்லி ஒய்ந்துபோன ராஜம் 'சள்' என்று விழுந்தாள்.

வசந்தா நல்ல புத்திசாலி. களை பொருந்திய முகம். எட்டு வயசுதான் ஆகிறது. குடும்பக் கஷ்டம் தெரிந்து நடந்து கொள்ளும் ஆற்றலுடையவள். என்றாலும் குழந்தைதானே?




சேர்க்கை வாசனை ஒவ்வொரு சமயம் அவள் நல்லதனத்தைச் சோதித்தது.

சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு தட தடவென்று வாசற் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டு, ''யாரது?'' என்றபடி ஓடினாள் ராஜம். கதவைத் திறந்ததும் சரேல் என்று உள்ளே நுழைந்தான் ராகவன். ''வசந்தா எங்கே, ராஜம்? கூப்பிடு குழந்தையை'' என்றான் பரபரப்புடன். அவன் முகத்தில் அலாதியான சந்தோஷம் நிலவியிருந்ததையும், கையிலொரு சிறு அட்டைப் பெட்டி இருந்ததையும் பார்த்த அவள் ஆச்சரியத்துடன், ''என்ன அது?'' என்றாள். அதைக் காதிலேயே வாங்கிக்கொள்ளாத ராகவன், ''இந்தா வசந்தா! பட்டுப் பாவாடை'' என்று கூவியபடி உள்ளே ஓடினான்.

''அது சரி, ஏது இது?'' என்றாள் ஆவலை அடக்க முடியாமல். ''ராஜம் நம்ம வசந்தா எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி தெரியுமா? பாவாடை, ஜரிகை மயமான பட்டுப் பாவாடை. இது அவளுக்காக என் முதலாளியின் வீட்டில் காத்திருந்தது. போனதும் போகாததுமாய், 'இந்தாப்பா' என்று கொடுத்து விட்டார் அவர். அது மட்டுமா? 'ராகவன்! உனக்கு முப்பது ரூபாய் இன்கிரிமெண்டும் மூன்று மாதச் சம்பளமும் கொடுக்கச் சொல்லிவிட்டேன் காஷியரிடம்' என்றார்.'' பேசிக்கொண்டே பொட்டலத்திலிருந்த பாவாடையை ராகவன் எடுக்க, ''நாம் காண்பது கனவா நினைவா, வசந்தாவிற்கா இவ்வளவு ஒசத்திப் பாவாடை? அறுபது எழுபது ரூபாய் விலை இருக்கும் போலேயிருக்கே'' என்று ஆச்சரிய

## விலை

நகைக் கடைக்கு ஓர் அம்மாள் வைரமோதிரம் ஒன்று வாங்குவதற்காக வந்தாள். நல்ல வெயில் வேளை. குமாஸ்தாக்கள் சாப்பாட்டிற்குச் சென்றிருந்தனர். முதலாளி மட்டும்தான் கடையில் இருந்தார். அவர் சில மோதிரங்களை எடுத்துக் காண்பித்தார். அந்த அம்மாள் தனக்குப் பிடித்த ஒரு மோதிரத்தைப் பொறுக்கி எடுத்து, ''இது என்ன விலை?'' என்று கேட்டாள். முதலாளி விலை சொன்னார். அந்தச் சமயத்தில் அந்தக் கடைப் பக்கமாக யாரோ ஒரு ஆள் பதுங்கிப் பதுங்கி வந்தான். அந்த அம்மா, ''அம்மாடியோ!'' என்று திடீரென்று உரக்கக் கத்திவிட்டாள். அவள் அலறலைக் கேட்டு அந்த ஆசாமி தன்னைத் தெரிந்து கொண்டு விட்டார்களோ என்று பயந்து பஞ்சாய்ப் பறந்து போய் விட்டான். அவன் அந்தக் கடையிலிருந்து ஓடுவதைக் கண்ட முதலாளி, ''ஐயையோ!'' என்று கத்தினார். தெருவிலுள்ள மக்கள் அவனை வரும், ''பிடி.. பிடி.. திருடன்.. திருடன்'' என்று கூச்சலிட்டனர்.

தற்செயலாக அந்த வழியே வந்த போலீஸ்காரனொருவன் அவனைப் பிடித்துவிட்டான். விசாரித்ததில், அவன் ஒரு பக்காத் திருடன் எனத் தெரியவந்தது! நகைக் கடைக்காரர், ''நல்லவேளை. நீங்கள் அவனைக் கண்டு கூச்சல் போடாவிட்டால்.. எதையாவது ஒன்றை அவன் அபேஸ் செய்திருப்பான்'' என்று அந்த அம்மாளுக்கு நன்றி கூறினார்.

அதைக் கேட்ட அந்த அம்மாள், ''அட பாவமே! நான் அவனைக் கண்டா கூச்சலிட்டேன்? அவன் வந்ததே எனக்கு முதலில் தெரியாதே! நான் நீங்கள் சொன்ன வைர மோதிரத்தின் விலையைக் கேட்டல்லவா கூச்சலிட்டேன்!'' என்று கூறியபோது கடைக்காரர் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

—கே. என். மகாலிங்கம்

மும் ஆனந்தமும் மனத்தில் பொங்க, திகைத்தாள் ராஜம். ''முதலாளியோட பெண் மனோரமா இருக்கிறாள் பாரு, ராஜம்! எட்டு வயசு தானாகிறது. நம்ம வசந்தாவை விடப் பொல்லாதவளாயிருக்கு. 'கதர்ப் பாவாடைதான் வேணும்' என்று இந்தப் பாவாடையை வீசி எறிந்திருக்கிறாள் வெளியே. 'அப்படீன்னா இவர் குழந்தைக்குக் கொடுத்து விடட்டுமா?' என்றார் அவர். 'தாராளமாய்க் கொடேன். எனக்கென்ன?' என்று சொல்லி விட்டாள் அலக்ஷியமாக. 'இந்தா ராகவா, உன் குழந்தைக்கு என் தீபாவளிப் பரிசு' என்று கொடுத்து விட்டார்.''

ராகவன் வசந்தாவை எழுப்பினான். கண் விழித்த அவள் அவன் கையிலிருந்த பாவாடையை ஒரு முறை பார்த்தாள். ''வேண்டாமப்பா எனக்கு'' என்று வீறிட்டாள். ராஜமும் ரகவனும் பயந்து போனார்கள்.

வசந்தாவை அப்படியே தூக்கி மடியில் வைத்துக்கொண்ட ராகவன் பரிவுடன், ''வசந்தா, கண்ணு! என்னைப் பாரு'' என்றான். கண்ணைத் திறக்காமலே, ''என்னை மன்னிச்சுடு அப்பா. இனிமேல் வீண் பேராசைப் படமாட்டேன். சீட்டிப் பாவாடையே போதும். சந்திரா பரிகாசம் பண்ணினால் டு விட்டுடறேன் அவளோடு. அதற்காக ஒருத்தர் வீட்டில் திருடி உதைபட்டுப் போலீஸ்காராளோடே போய் ஜெயிலிலே இருக்கவேண்டாம் நீ. நாங்களும் பிச்சைக்காரர்களாக மாறி தெருவிலே அலைய வேண்டாம்'' என்று புலம்பி அழுதாள் வசந்தா.

''அடாடா குழந்தை சொப்பனம் கண்டிருக்கா'' என்று வருந்தினான் ராகவன். ''தப்பு என் பேரில் தான். பிடிவாதம் பிடித்து அழுதாளேன்னு, திருடவா சொல்றே உங்கப்பாவை என்றேன்'' என்று கூறிய ராஜம் வசந்தாவை வாரியணைத்துக்கொண்டு ஈரக் கையால் கண்ணைத் துடைத்தாள். பளிச்சென்று தூக்கம் கலைந்தது வசந்தாவுக்கு.

# வெகுமதி

**வி. ஏ.**

அன்று லக்ஷ்மிபுரம் ஒரே கோலாகலமாக விளங்கியது. நகர மக்கள் புதுப் புது ஆடைகள் அணிந்து மிகவும் குதூகலமாய் இருந்தார்கள். அந்த ஊர் அரசனுக்கு அன்று பிறந்த நாள்.

கருணாகரர் மிகவும் கவலையோடு உட்கார்ந்திருந்தார். அவர் இப்போது பரம ஏழை. ஏழைகளுக்கு இல்லை என்னாது கொடுத்துக் கொடுத்து ஏழையானவர். அரசனுக்கு எதைச் சம்மானமாகக் கொண்டு போவது? அவரிடம் பொருள் இல்லை. அதனால் கவலையோடு உட்கார்ந்திருந்தார்.

எதிரே தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தை அவர் தற்செயலாகப் பார்த்தார். அவர் கண்கள் பிரகாசமடைந்தன. அங்கே அருமையான மாதுளங் கனிகள் இரண்டு பழுத்துத் தொங்கின. அந்த நாட்டிலேயே மாதுளங் கனி கிடைக்காது. அது மிகவும் அருமையான பொருள். அரசருக்கோ மாதுளங் கனி என்றால் உயிர்தான். அப்படிப்பட்ட மாதுளங் கனிகள் இரண்டு தொங்கினால் கருணாகரருக்கு எப்படி இருக்கும்?

துள்ளிக் குதித்தார். அரசரை எப்படியாவது பேட்டி கண்டு வரலாம் என்று புறப்பட்டார். அரசரைப் பார்க்கப் போவதென்றால் சாதாரண கிழிந்த ஆடைகளோடு போகலாமா? போகக் கூடாதுதான். ஆனால் அவர்தான் ஏழையாகி விட்டாரே!

அதனால் வாயில்காப்போன் அவரைத் தடுத்து நிறுத்தி விட்டான். ''போய்யா போ!'' என்று விரட்டினான்.

கருணாகரர் பார்த்தார். ''அப்பா! அரசருக்கு மாதுளம் பழம் என்றால் மிகவும் ஆசை. இந்த நாட்டிலேயே கிடைக்காத அரிய பொருள். அப்படிப்பட்ட பழங்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். அதனால் தயை செய்து உள்ளே விடு!'' என்றார்.

காவற்காரன் பார்த்தான். ராஜா சந்தோஷப்பட்டு இவருக்குப் பரிசுகள் கொடுப்பார் என்று எண்ணினான்.

''ஐயா, எல்லாம் சரி; உங்களுக்குக் கிடைக்கும் வெகுமதியில் மூன்றில் ஒரு பங்கு கொடுப்பதானால் உள்ளே போக விடுகிறேன்'' என்றான் அவன்.

கருணாகரர் சிறிது யோசித்துவிட்டு, சரியென்று ஒப்புக்கொண்டு உள்ளே போனார்.

ஆனால் அவருக்கு மறுபடியும் ஒரு தடை வந்தது. அரண்மனைக் காறுபாறு அவரை நிறுத்திவிட்டான்.

கடைசியில் அவனுக்கும் மூன்றில் ஒரு பங்கு தருவதாக ஒப்புக்கொண்ட பிறகுதான் அவன் அவரை உள்ளே போக விட்டான்.

கருணுகரர் எப்படியோ அரசரைப் பார்த்தால் போதும் என்று சபா மண்டபத்துக்குள் நுழையும்போது திவான் எதிர்ப்பட்டார்.

''எங்கே ஐயா, வந்தீர்? நீர் உள்ளே போகக்கூடாது'' என்று மற்ற இருவர்களைப் போலவே அவரும் தடுத்தார்.

கருணுகரர் மாதுளம் பழம் கொண்டு வந்திருப்பதைச் சொல்லவே திவான் அவரைப் பார்த்து, ''சரி; உமக்குக் கிடைக்கப் போகும் பரிசில் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கிறீரா?'' என்றேதான் அவரும் கேட்டார்.

இவ்வளவு பொறுப்புள்ளவர்கூட இவ்விதம் கேட்கிருரே என்று கருணுகரர் மனம் நொந்தார். மூன்று பேருக்கும் பரிசுகளைக் கொடுத்துவிட்டால் அவருக்கு என்ன மீதி இருக்கும்? அவர் பரிசு பெறவா வந்திருக்கிருர்? ராஜாவைப் பார்த்துத் தம் அன்பைத் தெரிவிக்க வேண்டும். அது ஒன்றுதான் அவர் ஆசை. அதனுல் திவானுக்கும் அப்படியே தருவதாக ஒப்புக்கொண்டு ராஜாவைப் பார்த்தார்.

இன்னும் எவ்வளவோ பிரபுக்களும் வியாபாரிகளும் பல அரிய பொருள்களைக் கொண்டு வந்திருந்தார்கள். அரசரோ அதையெல்லாம் கண் எடுத்துக்கூடப் பாராமல் கருணுகரர் கொண்டு வந்த மாதுளம் பழங்களை எடுத்துக்கொண்டார்.

''கருணுகரரே! உம்முடைய அன்பை மெச்சுகிறேன். உமக்கு வேண்டியதைக் கேளும்! உமக்கு ஏதாவது வெகுமானமாகத் தரவேண்டும் என்று விரும்புகிறேன்'' என்ருர் அரசர்.

கருணுகரர் மிகவும் பணிவாக, ''அரசே! எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம். எனக்கு வேண்டிய பரிசு பன்னிரண்டு கசையடிகள்தான்!'' என்ருர்.

''என்ன கருணுகரரே, கேலி செய்கிறீர்களா?''

''இல்லை அரசே! இந்தப் பரிசுகளை நான் மூன்று பங்காகப் பிரிக்க வேண்டும். மூன்று தடவையாக நான் அதை வாங்கிக் கொள்கிறேன்'' என்ருர்.

---




**வாத்தியார்:** நாட்டில் வாழும் மிருகங்களில் பயங்கரமான ஒன்றைச் சொல்லு!

**பையன்:** காளி, ஸார்!

**வாத்தியார்:** காளியா?

**பையன்:** ஆமாம் ஸார்! அடுத்த வீட்டு அம்மா பெயர் அது தான், ஸார்!

—சோமு.



இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று அரசர் நினைத்து, ''சரி; உமக்கு வேண்டியபோது பன்னிரண்டு கசையடிகளைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்றார். அதன்படியே சேனாதிபதியைக் கூப்பிட்டு அதை நிறைவேற்றி வைக்கவும் கட்டளையிட்டார். கருணாகரர் அரசரிடம் விடைபெற்றுக் கொண்டு சேனாதிபதியுடன் திரும்பினார். இவருடைய வருகைக்காக, திவான் அங்கே காத்திருந்தார். கருணாகரர் உடனே சேனாதிபதியைப் பார்த்து, ''ஐயா, என்னுடைய வெகுமதியில் மூன்றில் ஒரு பங்கு இவருக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். அதன்படி கொடுத்து விடுங்கள்'' என்றார்.

திவான் பயந்துகொண்டே கையை நீட்டினார். அவருக்குப் பரிசு கிடைத்தது. அதாவது சரியான கசையடிகள் நாலு கிடைத்தன.

அதே போல் காறுபாறுக்கும் வாயிற்காப்போனுக்கும் நாலு நாலு கசையடிகள் வீதம் பரிசாகக் கிடைத்தன.

அரசர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டார். கருணாகரருடைய உண்மை அன்பை மெச்சி அவரை அன்றே திவானாக நியமித்தார்.

# டைரி சொல்லும் கதை

## ராமலிங்கம்

1-7-54
ஞாயிற்றுக்கிழமை.

சித்தி பொல்லாதவள்.

இன்று சாயங்காலம் தின்பதற்காக ஒரு மைசூர்ப்பாகு கேட்டேன். கொடுக்க மாட்டேன்னு சொல்லி விட்டாள். ரொம்பச் சாப்பிட்டால் வயிற்றை வலிக்குமாம். பொய்!

என் மேலே கொஞ்சம்கூடப் பிரியம் கிடையாது அவளுக்கு. அத்தைகூட இதைத்தான் சொல்லுகிறுள். சரோஜா பிறந்தவுடனே என் சித்திக்கு என் மேலே இருந்த கொஞ்சநஞ்சம் பிரியமும் போயிட்டதாம். அவளைத்தான் ரொம்பவும் சீராட்டிப் பாராட்டி வளர்க்கிறுளாம்.

எனக்கும் இது உண்மையாகத்தான் படுகிறது. இல்லாவிட்டால் சாயங்காலம் சரோஜாவிற்கு மட்டும் மைசூர்ப்பாகு கொடுத்துவிட்டு, எனக்குச் கொடுக்காமல் இருப்பாளா?

எவ்வளவு ஒர வஞ்சனை! தான் பெற்ற பிள்ளை என்ருல் ஒரு மாதிரி; இன்னெருத்தி பெற்ற பிள்ளை என்ருல் ஒரு மாதிரியா? இப்படிக் கேட்டுத்தான் எங்க அப்பா என் சித்தியின் கன்னத்தில் அடித்தார். அடியா அது! சிங்கம் அறைவது போலல்லவா இருந்தது?

சித்தி, "உடம்புக்கு ஆகாது; மைசூர்ப்பாகு தரமாட்டேன்" என்றவுடன் நான் அழுதுகொண்டே அப்பாவின் அறைக்குப் போனேன். அங்கே அவர் ஏதோ ஆபீஸ் கணக்குகள் போட்டுக்கொண்டிருந்தார். நான் அழுதுகொண்டே வருவதைப் பார்த்தவுடன், "ஏண்டா அழறே, கண்ணு!" என்று என் கண்களைத் தம் மேல் துண்டிஞல் துடைத்துவிட்டு, செல்லமாக என்னை மடியில் உட்கார வைத்துக்கொண்டார். நான் விக்கிக்கொண்டே, "சித்தி அடிச்சாப்பா" என்றேன்.

"எதுக்குடா அடிச்சாள்?" என்று கோபத்துடன் கேட்டார்.

"மைசூர்ப்பாகு கேட்டேன். கொடுக்க மாட்டேன்னுட்டு அடிச்சுட்டாப்பா" என்று பதிலளித்தேன்.

பிறகு நடந்ததைப் பார்க்க வேண்டுமே!

என்னைத் திடீரென்று தம் மடியிலிருந்து இறக்கிவிட்டு, கூடத்திற்கு விரைந்தார். நானும் அவருடன் சென்றேன்.

சித்தி, சின்னப் பாப்பா சரோஜாவுக்குத் தலை வாரி, முகத்திற்குப் பவுடர் தடவிக்கொண்டிருந்தாள். என் அப்பா விடுவிடுவென்று சித்தியின் அருகில் சென்று, "குழந்தையை ஏன் அடித்தாய்?" என்று கர்ஜித்தார்.

"நான் அடிக்கவில்லையே; மைசூர்ப்பாகு கேட்டான். கடலைமாவு.. ரொம்பச் சாப்பிட்டால் வயிற்றில் ஏதாவது சங்கடம் செய்யுமே என்றுதான் கொடுக்கவில்லை."

என் சித்தி வார்த்தையை முடிப்பதற்குள், "அடிப்பதையும் அடித்துவிட்டு, நொண்டிச் சாக்கு வேறு சொல்லுகிருயா?" என்று இரைந்துகொண்டே என் அப்பா சித்தியின் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

சித்தியின் கன்னம் அப்படியே செக்கச்செவேலென்று சிவந்துவிட்டது. கண்களிலிருந்து 'குபுகுபு'வென்று நீர் வெள்ளம்போல் உருண்டு ஓடியது. கன்னத்தைப் பிடித்தவாறு சரோஜாவை அழைத்துக்கொண்டு சமையலறைக்குள் சென்றுவிட்டாள்.

எனக்குப் பாவமாயிருந்தது. 'ஏண்டா பொய் சொன்னேம்?' என்றுகூட நினைத்தேன். ஆனல் அத்தைதான் அப்படிச் சொல்லச் சொல்லியிருந்தாள். "சித்தி மேலே




உனக்கு ஏதாவது கோபம் வந்தா, அப்பாகிட்டே அவ உன்னை அடிச்சான்னுட்டு சொல்லிடு'' என்று சொல்லியிருக்கிறாள். அதன்படி தான் நான் பொய் சொன்னேன்.

இதை என் அத்தை பிள்ளை— என் 'டியரஸ்ட் பிரண்டு' - ராமுவிடம் சொன்னேன். அவனும், ''உங்க அப்பா அடிச்சது நியாயம் தாண்டா. உன் சித்திக்கு நல்லா வேணும். அவ ரொம்பப் பொல்லாதவ. அவளை நம்பாதே'' என்று சொல்லிவிட்டான்.

இத்துடன் இன்றைக் குறிப்பு முடிவடைகிறது. —சங்கர்.

2-7-54
திங்கட்கிழமை

**சா**யங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டிற்கு வந்தேன். சரோஜா பட்டுப் பாவாடையுடனும் பட்டுச் சொக்காயுடனும் காட்சியளித்தாள். இரண்டும் தீபாவளிக்காகத் தைத்தவை. அவளுக்கு ரொம்பப் பொருத்தமாய், அழகாய் இருந்தன.

உடனே நானும் எனது தீபாவளி ஸில்க் சட்டையை எடுத்துப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தேன். எனக்கு அந்தச் சட்டை ரொம்பவும் பிடித்திருக்கிறது.

நானும் புதுச் சட்டை போட்டுக் கொள்ளுவது சித்திக்குப் பொறுக்கவில்லை போலிக்கு. உடனே தன் பிரசங்கத்தை ஆரம்பித்து விட்டாள்.

''ஏண்டா சங்கர்! இப்பொழுது விளையாடத்தானே போகப் போகிறாய்? இந்தப் புது சட்டையைப் போட்டுக்கொண்டு போனால் அழுக்காய்விடாது? அந்தப் பழைய சட்டையே போட்டுக்கொண்டு போயேன்'' என்றாள்.

எனக்குக் கோபம் கோபமாய் வந்தது.

''சரோஜாவைப்போல் நானும் புதுச் சட்டை போட்டுக்கொள்ளு

வது உனக்குப் பொறுக்கலியோ?'' என்று எதிர்த்துக் கேட்டேன்.

சித்தி கன்னத்தில் கையை வைத்து ஆச்சரியத்தினால் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள். என் வார்த்தைகள் அவள் மனத்தைப் புண்படுத்தியிருக்க வேண்டும்.

நான் அதை லட்சியம் செய்யவில்லை. என் பாட்டுக்குப் புதுச் சட்டையையும், புது டிராயரையும் போட்டுக்கொண்டு விளையாடக் கிளம்பிவிட்டேன். ஆனால்—

மைனர்போல் வீட்டை விட்டுக் கிளம்பிய நான் வீடு திரும்பும் பொழுது அழுது வடிந்துகொண்டே திரும்பினேன்.

போகும்பொழுதே அப சகுனம் போல் சித்தி, 'சட்டை அழுக்காகி விடும்' என்றாள்.

அதேபோல் நடந்தும் விட்டது.

மண்ணில் விழுந்து விளையாடியதன் பயனாகவும், என் அசுர ஆட்டங்களின் விளைவாகவும் என் மெல்லிய சட்டை அழுக்கடைந்ததோடு அல்லாமல் ஓர் இடத்தில் கிழிந்தும் விட்டது.

சித்தி, ''நான் அப்பொழுதே சொன்னேனே, இல்லியோ?'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம், நீ சொன்னதால் தான் இப்படி ஆய்விட்டது'' என்று பதிலுக்குக் கத்தினேன். சித்தி அடங்கிவிட்டாள். அதற்குப் பிறகு அவள் என்னுடன் பேசவில்லை.—சங்கர்.

3-7-54
செவ்வாய்க்கிழமை

சித்தி சொன்னது ஒவ்வொன்றும் எனக்குக் குதர்க்கமாகப் பட்டது.

ஓர் உபாத்தியாயரின் ஞாபகார்த்தமாகப் பள்ளி விடுமுறை. இந்தத் தினம் பார்த்தா மழை கொட்டு - கொட்டென்று கொட்ட வேண்டும்?

நான் விளையாடுவதற்குப் போக முடியாமல் மத்தியானம் வரையிலும் வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டியதாயிற்று.

நல்ல வேளையாக மாலையில் சிறிது மழை விட்டது. ஆனால் லேசாகத் தூறிக்கொண்டு மட்டும் இருந்தது. உடனே நான் வெளியில் கிளம்பிவிட்டேன்.

உடனே சித்தி வந்துவிட்டாள் என்னைத் தடுக்க. ''ஏண்டா! மழையில் விளையாடப்போனால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?'' என்று என் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.



நான் அவளைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தேன். நேற்றைத் தினத்தைவிட இன்று அவள் மேல் எனக்கு ரொம்ப ஆத்திரம்.

நேற்று சட்டை அழுக்காய் விடும் என்றாள். அதேபோல் சட்டை அழுக்காகியதுடன், கிழிந்தும் விட்டது. இன்று உடம்பு என்னத்துக்கு ஆகும் என்கிறாள். அதே போல் உடம்புக்கும் ஏதாவது வந்துவிட்டால்?

இதை நினைத்தவுடன் என் ஆத்திரம் பன்மடங்காக அதிகரித்துவிட்டது. 'வெடுக்'கென்று என் சித்தியின் பட்டுப்போன்ற மென்மையான கையைக் கடித்து விட்டேன். என் பற்கள் ஆழமாகப் பதிந்துவிட்டன.

அப்படியும் சித்தி என்னை விடவில்லை. குனிந்து என்னை வாரி அணைத்துக்கொண்டு, ''சங்கர்! இன்னிக்கு நான் உன்னை எப்படியும் போக விடமாட்டேன். மழையில் நனைஞ்சால் உடம்புக்கு ஜுரம் வந்தாலும் வந்துவிடும். நான் சொல்லுவதைக் கேட்கவே மாட்டேன் என்கிறாயே! உனக்கு என் மேல் கொஞ்சம்கூடப் பிரியம் இல்லை? நான் என்ன அவ்வளவு பொல்லாதவளா?'' என்று கண் கலங்கக் கேட்டாள்.

என் மனதும் சற்று இளகிவிட்டது. ஆனால் மறு கணம், 'உன் சித்தி ரொம்பப் பொல்லாதவள்' என்று என் அத்தை சொன்னது நினைவிற்கு வந்தது. என் இளகிய மனம் இறுகிவிட்டது.

''ஆமாம்! நீ பொல்லாதவள். உன் மேல் எனக்குப் பிரியம் இல்லை'' என்று ஓடிவிட்டேன்.—சங்கர்.

4-7-54
புதன்

சித்திக்கு ஜோஸ்யம் தெரியுமோ என்னமோ? 'மழையில் விளையாடப் போகாதே. ஜுரம்வரும்' என்றாள். அதேபோல் ஜுரம் வந்துவிட்டது. முதலில் லேசாகத் தலை வலித்தது. பிறகு கண்கள் எரிந்தன. கடைசியில் உடம்பு பூராவும் அனலாகக் கொதிக்கவாரம்பித்தது.

இதற்கு மேல் என்னால் இன்று எழுத முடியவில்லை—சங்கர்.

5-7-54 வியாழன். டைரி இல்லை.

6-7-54 வெள்ளி. டைரி இல்லை.

7-7-54 சனி. டைரி இல்லை.

8-7-54 ஞாயிறு.

அப்பாடா! இன்றுதான் சிறிது தேவலை. சென்ற மூன்று நாட்க



ளாக என்னை ஆட்டி வைத்த ஜுரம் இன்றுதான் என்னைவிட்டு அகன்றது. படுக்கையில் படுத்த படியே ஏதோ யோசித்துக்கொண் டிருந்தேன்.

அப்பொழுது என் சித்தி, ''இப் பொழுது உடம்பு எப்படியடா இருக்கிறது சங்கர்?'' என்று கேட்டுக்கொண்டே கையில் கஞ்சி யுடன் உள்ளே வந்தாள்.

நான் வெறுப்புடன் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டேன். 'அபசகுனம்போல் இவள் என்னைத் தடுத்ததால்தானே எனக்கு ஜுரம் வந்தது?' என்று நினைத்தேன்.

''பேச்சு மூச்சில்லாமல் நீ படுத்துக் கிடந்ததைப் பார்த்த வுடன் நானும் அப்பாவும் ரொம் பப் பயந்துட்டோம் சங்கர்'' என்று அன்புடன் என் தலையைக் கோதிக் கொடுத்தாள் சித்தி.

அவ்வளவும் வேஷம்—

என் அப்பாவாவது கவலைப்பட் டிருப்பார். இவளுக்கா கவலை! நான் செத்தால்கூட வருத்தப்பட மாட்டாளே!

ஆனால் பிறகுதான் என் தவறு தெரிந்தது. அத்தையின் பேச்சைக் கேட்டு, நான் சித்தியைப்பற்றி எவ்வளவு தவருகப் புரிந்துகொண் டேன் என்பதைப் பிறகுதான் உணர்ந்தேன்.

இரவு கஞ்சி குடித்துவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண் டிருந்தேன். சித்தி என் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

அப்பொழுது அறைக்கு என் அப்பா வந்தார். என் உடம்பைப் பார்த்துவிட்டு, ''இப்பொழுது தேவலை'' என்று சித்தியிடம் சொன்னர். சித்தி ஒன்றும் பேச வில்லை.

அப்பா தொடர்ந்தார்: ''நான் உன்னைப்பற்றித் தவருக நினைத்து விட்டேன். மூத்தாள் மகனையிற்றே, எங்கே அவனைச் சரியாகக் கவனிப்ப தில்லையோ என்று உன் மீது சந்தேகப்பட்டுவிட்டேன். சென்ற மூன்று தினங்களாக பகல் இரவு பாராமல் அவனுக்குச் செய்த சிசு ருஷையினல்தான் அவன் உடல் தேறினன். பெற்ற தாய்கூட இவ் வளவு செய்திருக்க மாட்டாள்.''

அப்பா சித்தியின் கைகளைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக் கோரும் பாவனையில் வருத்தம் தெரிவித்தார்.

எனக்கு ஒரே திகைப்பாய்ப் போய்விட்டது. நான் யாரை வெறுத்தேனே அவளே என்னை மிகவும் பரிவுடன் கவனித்திருக் கிருள். அவள் எவ்வளவு நல்லவள். நான்தான் சித்தியைத் தவருகப் புரிந்துகொண்டிருக்கிறேன். எல் லாம் தெரிந்த அப்பாவே உண் மையை உணர்ந்து சித்தியைப் புகழும் பொழுது நான் மட்டும் இன்னமும் அவளை வெறுக்கலாமா?

சித்தியிடம் நாளை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தேன்.—சங்கர்.

9-7-54
திங்கட்கிழமை

அப்பா ஆபீஸிற்குச் சென்று விட்டார். சரோஜா கூடத்தில் விளையாடிக்கொண் டிருந்தாள். சித்தி சமையலறையில் எனக்காகக் கஞ்சி தயாரித்துக்கொண்டிருந் தாள்.

திடீரென்று படுக்கையைவிட்டு எழுந்திருந்து சமையலறைக்குள் நுழைந்தேன். சித்தி என்னை நிமிர்ந்து பார்த்து, ''என்ன வேண்டும், சங்கர்?'' என்று கேட் டாள். அவள் குரலில் பரிவு.

கண்களில் கண்ணீர் முட்ட, ''சித்தி உன்னைப் பற்றித் தவருக நினைத்துக்கொண்டு, உன் மனத்தை நோகடித்துவிட்டேன். என்னை மன் னித்து விடு, சித்தி'' என்று அவள் காலில் விழுந்து கதறினேன்.

''என்ன சங்கர் இதெல்லாம், நீ ஒன்றும் தெரியாத குழந்தை; இதுக் கெல்லாம் என்ன மன்னிப்பு? நீ தவறே செய்யவில்லை'' என்று என்னைத் தூக்கி நிறுத்தி, தன் மார்பு டன் அணைத்துக்கொண்டாள் சித்தி. அந்த அரவணைப்பில் என்னை மறந்து நின்றேன் நான்.

'இனி அத்தை, ராமு இவர் களுடைய பேச்சைக் கேட்பதில்லை' என்று தீர்மானமும் செய்து கொண்டேன்.

இன்று ஒரு நன்னுள்.

இப்படிக்கு, சங்கர்.

# மேன்மை உள்ளம்

**ரங்கன்**

"கிளிமூக்கு சார் டோய்!''

வராந்தாவின் கோடியில் வரும் பரசு வாத்தியாரைக் கண்டதும் எட்டாவது கிளாஸ் மாணவர்கள் கூச்சல் போட்டார்கள். இன்று, நேற்றல்ல; தினமும் வழக்கமாய் அவரைப் பார்த்துப் போடும் கூப்பாடுதான்!

வாத்தியார் காதிலே பையன்கள் போட்ட கூச்சல் விழத்தான் செய்தது; ஆனாலும் அவரால் என்னதான் செய்ய முடியும்? அவருடைய நல்ல சுபாவத்தைத் தெரிந்துகொண்டுதானே அவர்கள் வாலாட்டுகிறார்கள்?

உண்மையில் பரசுராமன் கொஞ்சம் நல்லவர்; இரக்க சுபாவம் படைத்தவர்; யாரையும் அநியாயமாய்த் தண்டிக்கமாட்டார். மாணவர்களைப் பிரம்பினால் அடித்து, பாடத்தைச் சொல்லித் தருவது அடியோடு பிடிக்கவே பிடிக்காது.

மாணவர்கள் அவரிடம் நன்றாகப் பழகினால் அவர் சொல்லிக் கொடுக்கும் பாடம் கேட்க இனிப்பாகவும் உத்ஸாகமாகவும் இருக்கும். இதை அறிந்த பள்ளிக்கூடப் பையன்கள் அவரிடம் நன்றாகப் பழகி நல்ல பெயர் வாங்கினார்கள். அவரும் தன் கடமையை நன்றாகச் செய்கிறோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் 'எட்டாவது வகுப்பு மாணவர்கள் அவரிடம் மரியாதையுடன் பழகவில்லை; மேலும் விஷமம் செய்தார்கள்.

எட்டாவது வகுப்பு மாணவர்கள் பொல்லாதவர்கள் என்று பரசுராமன் அறிந்திருந்தார். அந்த வகுப்பு மாணவர்கள் விஷமக் கொடுக்குகள் என்ற பெயரை வாங்கி யிருந்தார்கள். 'வானர சேனை' என்று அவர்களுக்குத் தனிப் பெயர் இருந்தது. என்றாலும் பரசுராமன் அவர்களைச் சரியான முறையில் நடத்தி நல்ல வழிக்குக் கொண்டுவர எண்ணினார். ஆனால் எல்லாம் வீணாகியது. அவர் எவ்வளவு நல்லதனமாகச் சொன்னாலும் மாணவர்களின் கொட்டமும், விஷமமும் போகவேயில்லை. வாத்தியாரைக் கொஞ்சமும் மதிக்காமல் அவரிடம் தங்கள் கைவரிசையைக் காட்டினார்கள். வகுப்பில் அசந்தர்ப்பமான கேள்விகள் கேட்டு அவரை மடக்கினார்கள். கடைசியில் அவர் மூக்கு, கொஞ்சம் நீளமாகவும் கூர்மையாகவும் இருந்ததால் 'கிளிமூக்கு சார்' என்ற பெயரும் வைத்துவிட்டார்கள்!

முதலில் வாத்தியார் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டார். நயமாகவும் பயமாகவும் சொல்லிப் பார்த்தார். ஆனால் நாளாக ஆக, பையன்களின் விஷமம் அதிகமாகிக்கொண்டே வந்தது. வாத்தியார் என்ற மதிப்பே மறைந்து போயிற்று. வாத்தியார் பொறுமை இழந்துவிட்டார். வெறும் கையுடன் வருபவர் பிரம்புடனே கிளாஸில் நுழையலானார்.

ஆனாலும் பையன்களின் விஷமமும், கொட்டமும் போகுமா? அவர்களின் ஆர்ப்பாட்டம் குறையவில்லை. பள்ளிக்கூடச் சுவர்களிலும், கோவில் மண்டபங்களிலும், வாத்தியாரின் 'கார்ட்டூன்' பொம்மையும், புதிய பட்டமும் தெரியலாயின! எங்கே பார்த்தாலும் அவரைப்பற்றித்தான்!

* * *

**கை**யில் பிரம்புடன் வகுப்பில் நுழைந்தார் வாத்தியார், மரியாதைக்காக யாரும் தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்கவில்லை! தினமும் கிடைக்கும் சின்ன மரியாதையும் அன்று கிடைக்கவில்லை!

வாத்தியாருக்கு எப்படி யிருக்கும்? கோபத்தில் உதடுகள் துடித்

தன. முகம் ஜிவு ஜிவு என்று சிவப்பாகியது. உடனே போய்த் தலைமை வாத்தியாரிடம் ரிப்போர்ட் செய்யலாமா என்று நினைத்தார். ஆனால் உடனே ''போகட்டும், நாமே சாந்தமாகப் புத்தி சொல்லலாம்'' என்று நினைத்தார்.

உடனே கோபத்தை மறைத்துக் கொண்டார். அவர்களைப் பார்த்து, ''மாணவர்களே, சிறிது நேரம் ஆலோசித்துப் பாருங்கள். ஒரு வாத்தியாருக்கு நீங்கள் வைக்கும் மதிப்பு இதுதானா? ஹைஸ்கூல் படிப்பு இதுதானா?'' என்று கேட்டார். யாரும் பேசவில்லை. வெட்கத்தால் தலையும் குனியவில்லை.

வாத்தியார் மேலும் பேசினார். ''சரி, போகட்டும்! எனக்காக நிற்க வேண்டாம், மற்றொரு வாத்தியார் வந்தால் இப்படித்தானா செய்வீர்கள்? அப்போது அவர்கள் என்ன நினைப்பார்கள்?'' என்று கேட்டார்.

இப்பொழுது மானீட்டர் மணி பேசினான். ''சார், நீங்களானால் நிற்கமாட்டோம். வேறு யார் வந்தாலும் நிற்போம், சார்'' என்றான் அவன். அவன் கொஞ்சம் துடுக்குப் பயல். வகுப்புக்கு அவன் தான் தலைவன்.

வாத்தியாருக்குக் கோபம் ஏறி விட்டது. பொறுமை பறந்துவிட்டது. கையிலிருந்த அவருடைய பிரம்பு வேகமாய் மணிமேல் பறந்தது. தப்பித்துக் கொள்ளத் துணிந்த அவனைக் கையில் பிடித்துக்கொண்டு பிரம்பை விளாசினார். அவனுடைய முதுகு, தோள் இவற்றைப் பதம் பார்த்த பிறகும் பிரம்பு தன் வேலையை விடவில்லை. அவன் கண்களில் நீர் தாரை தாரையாய் வரும்வரை பிரம்பு நிற்கவில்லை. என்றாலும் வாத்தியாரின் கோபம் போகவில்லை.

மாணவர்கள் செயலற்றுப் போனார்கள். அவருக்கு அவ்வளவு கோபம் வந்ததை அவர்கள் கண்டதே கிடையாது, மேலும் பேசினால் தங்களையும் பிரம்பு பதம் பார்க்கும் என்ற பயத்தில் அவர்கள் பேசவே யில்லை.

ஏதோ சத்தத்தைக் கேட்டுப் பரசுராமன் தலையைத் திருப்பினார். கதவருகில் வேணு என்றொரு பதினொரு வயதுப் பையன் நின்றுகொண்டிருந்தான்.

''என்னடா?''

''உள்ளே வரலாமா, சார்?''

சாதாரணமாய் நேரம் கழித்து வரும் பையன்கள் அவரைக் கேட்காமலே உள்ளே நுழைவார்கள். இவனோ வாத்தியாரை மரியாதையுடன் கேட்டு உள்ளே நுழைகிறான்! வாத்தியாருக்கு அவன்மேல் அன்பு பிறந்தது.

ஆனால் மறுகணமே அன்பு மறைந்துப் போயிற்று. மணிமேல் இருந்த கோபம் இவன் மேல் திரும்பியது. வேணு தினமும் நேரம் கழித்து வருபவன்.

''ஏண்டா தாமதம்?''

''சார்......'' என்று இழுத்தான் அவன்.

''என்னடா இழுக்கறே? ஏன் லேட்? தினமும் ஏண்டா இப்படி வருகிறாய்? இஷ்டம்போல் வந்து போக இது என்ன சினிமா ஹால் என்று நினைத்துக்கொண் டிருக்கிறாய்? இது பள்ளிக்கூடம்டா, பள்



ளிக்கூடம்....'' என்று சொல்லிக் கொண்டே பிரம்பை அவன்மேல் விளாசினர். மணியைப் போலவே இவனையும் பிரம்பு விளாசிவிட்டது. மேலும் மணிமேல் கோபம் காரணமாய் இவனை இன்னும் முரட்டுத்தனமாய் அடித்துவிட்டார். கை வலிக்கும் வரை, அவன் கதறலை லட்சியம் செய்யாமல் அடித்தார். இவ்வளவு கல்நெஞ்சம் தமக்கு எப்படி வந்தது என்று தம்மையே நொந்துகொண்டார். பிறகு பாடத்தை நடத்தினர். தினமும் பலவித அசட்டுக் கேள்விகளைக் கேட்டு அவரைத் திணறவைக்கும் மாணவர்கள் இன்று பாடம் முடியும்வரை பேசவேயில்லை. பிரம்பு வேலை செய்ததென்று பரசுராமன் திருப்தி அடைந்தார். என்றாலும் பாடத்தின் நடுவில் அடிக்கடி வேணுவின் முகம் வந்து வேதனை அளித்தது.

* * *

இந்தச் சம்பவம் நடந்த பிறகு பையன்களின் ஆர்ப்பாட்டம் குறை




யத் தொடங்கியது. வாத்தியாரிரிடம் மரியாதையாக நடந்து கொண்டார்கள்; என்றாலும் வாத்தியாருக்குத் திருப்தி ஏற்படவில்லை. காரணம் என்னவென்றால் நான்கைந்து நாட்களாக வேணு பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை. விசாரித்ததில் அவனுக்கு நல்ல காய்ச்சலென்றும் தெரிந்தது.

பரசுராமன் பயந்து தாம் செய்த குற்றத்திற்காக அவர் வருந்தினர். அன்று மாலையே வேணுவின் வீட்டிற்குச் சென்றார்.

வேணு தன் அண்ணனுடன் கூரை வீட்டில் வசித்து வந்தான். அவனுடைய தாய்தந்தையர்களும் ஊரில் இல்லை. வேணுவை விட இரண்டு வயது மூத்தவனான அண்ணன் மட்டும் தம்பியுடன் வீட்டில் வசித்து வந்தான்.

வேணுவுக்கு அன்று காய்ச்சல் குறைந்திருந்தது, என்றாலும் தூக்கத்தில் ''சார், வேண்டாம் சார், அடிக்காதீர்கள், சார்'' என்று பிதற்றுவது போகவில்லை. அவன் அவஸ்தையைக் கண்டு வாத்தியார் கண்களில் நீர் மல்கியது.

பரசுராமன் ஒண்டிக்கட்டை; மனைவி மக்கள் இல்லாதவராதலால் வேணுவைக் காப்பாற்றும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார். ஏழைகளான வேணுவின் அண்ணனால் என்ன செய்ய முடியும்? அதனால்தான் வாத்தியாரே டாக்டரை அழைத்து வந்தார்.

ஒரு வாரம் பத்து நாளில் வேணுவின் காய்ச்சல் குறைந்தது. அவன் இப்போது நன்றாகப் பேசினன். எல்லோரையும் சுலபமாகத் தெரிந்து கொண்டான். முதலில் வாத்தியாரைப் பார்த்து நடுங்கினாலும், நாளடைவில் அது மறைந்து போயிற்று.

ஒரு நாள் வாத்தியார் அவனைப் பார்க்க வந்தார். அவன் பக்கத்தில் உட்கார்ந்து ஆரஞ்சுப் பழத்தை உரித்து,விதையை நீக்கிக் கொடுத்தார். அப்பொழுது வேணு அவரைப் பார்த்து, ''ஸார், நான் ஒன்று சொல்லட்டுமா?'' என்றான்.

''சொல்!''

''கோபிக்கமாட்டீர்களே?''

''மாட்டேன்.''

அவன் சொன்னான்: ''சார், அன்று நீங்கள் என்னை அடித்ததே தப்பு.''

வாத்தியார் கோபத்தை அடக்கிக்கொண்டு ''ஏன் தப்பு? அப்படி முரட்டுத்தனமாய் அடித்ததுதான் தப்பே ஒழிய நீ லேட்டாய் வந்ததற்காக அடித்தால் என்ன தப்பு? நான் கிளிப் பிள்ளைக்குச் சொல்வது போல் தினமும் லேட்டாய் வராதே'' என்று சொல்லியும் நீ லேட்டாய் வருவது என்னை அவமானப் படுத்துவது போலில்லையா?'' என்று கடுமையாகக் கேட்டார்.

வேணு 'ஓ'வெனக் கதறிவிட்டான். விக்கல் விம்மல்களுக்கிடையே அவன், ''ஸார், உங்களை அவமானப்படுத்துவதற்காக அன்று லேட்டாய் வரவில்லை. உங்களை அவமானப் படுத்தக் கூடாதே என்றுதான் நான் லேட்டாய் வந்தேன்'' என்முன்.

''என்ன?'' என்முர் பரசுராமன். அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஆமாம் சார், ஆமாம். அன்று உங்களை நன்ருக அவமானப்படுத்த வேண்டுமென்று எல்லோருக்கும் மானீடர் மணி சொன்னுன். நீங்கள் அன்று வரும்போது யாரும் மரியாதைக்காக எழுந்து நிற்கக் கூடாதென்றும், அப்படி நிற்பவர்களைப் பள்ளிக்கூடம் விட்டதும் செம்மையாக உதைப்பதாகவும் சொன்னுன். எனக்கு உங்களை அவமானப் படுத்த விருப்பமில்லை. மணியை எதிர்க்கவும் தைரியமில்லை. அதனுல் வேண்டுமென்றே நீங்கள் கிளாஸில் நுழைந்த பிறகு வந்தேன். உங்களுக்கு இதெல்லாம் தெரியாது. என்னைத் தப்பாக நினைத்து விட்டீர்கள்'' என்முன். இதைத் சொல்லும்போது அவன் பெருக்கிய கண்ணீர்தான் எவ்வளவு!

''நீ அன்று வேண்டுமென்றே லேட்டாய் வந்தது எனக்கெப்படித் தெரியும்? நீ தினமும்தான் லேட்டாய் வருகிறுயே?''

''நான் லேட்டாய் வருவதற்குக் காரணமுண்டு. ஏனென்ருல் என் அண்ணனும், நானும்தான் எல்லா வேலையும் செய்யவேண்டும். அண்ணு தான் சமையல் செய்வான். அவனுக்கு உதவி செய்து விட்டுப் பள்ளிக்கூடம் போவதற்குள் லேட்டாய் விடும்.

''ஆனுல் நீங்கள் என்னை அடித்தீர்களே! அதற்கு முதல்நாள்தான் இனி லேட்டாய் பள்ளிக்கூடம் போகக் கூடாதென்று தீர்மானித்தேன். வீட்டு வேலைகளைக் காலையிலேயே எழுந்து செய்துவிடலாமென்று நினைத்தேன். ஆனுல் மணி பயமுறுத்தினதால் வேண்டுமென்றே லேட் செய்தேன்'' என்று முடித்தான் வேணு.

கேட்டதுதான் தாமதம்; வாத்தியாரின் உள்ளம் சுக்குநூருகியது. மேன்மையான உள்ளத்தைப் புண்படுத்தின வருத்தத்தில் அவர் தலை குற்றவாளியின் தலைபோல் குனிந்தது.

இப்பொழுது வேணுவும், அவன் அண்ணனும் பரசுராமன் வீட்டிலேயே வசிக்கிருர்கள்; மேலும் வாத்தியார் இப்பொழுது பிரம்பை உபயோகிப்பதே கிடையாது!

---

## சென்னையின் வெற்றி!

ராஞ்சி டிராபி கிரிக்கெட் மாட்சுகள் தொடங்கி 21 வருஷங்கள் ஆகின்றன. இத்தனை வருஷங்களில் இந்த வருஷம் தான் சென்னை அதில் வெற்றி வாகை சூடியிருக்கிறது. பெரிய ஆட்டக்காரர்கள் அடங்கிய ஹோல்கார் கோஷ்டியை இளைஞர்களடங்கிய சென்னைக் கோஷ்டி திணறவடித்ததுடன் வெற்றியும் கண்டது பெரிய சாதனையாகும்.

சென்னைக் கட்சி: 487 & 311; ஹோல்கார் கட்சி: 417 & 326.

# கணக்கு விவகாரம்



**ரங்கநாயகி**

[பாத்திரங்கள்: ராமு, அவன் அப்பா, அம்மா, வீட்டு வேலைக்காரி]

### காட்சி 1

அப்பா: எங்கேடி அந்தத் தடியன்?

அம்மா: எந்தத் தடியன்?

அப்பா: எல்லாம் உன் கிளிப் பிள்ளை ராமுத் தடியன்தான்.

அம்மா: என்னத்துக்காகச் சும்மா-சும்மாத் தடியன்னு திட்டுகிறீர்கள்? அப்படிக் கூப்பிட்டுக் கூப்பிட்டுத்தான் உடம்பு ஒடிஞ்சு விழறமாதிரி ஆயிட்டான்.

அப்பா: போதும் பிரபாவம்; இப்போ எங்கே போனான் அவன்? அதைச் சொல்லு முதலில். வாசல்லே விளையாட ஓடிட்டானா? அவன் வாத்தியார் இன்றைக்கு என்னைத் தெருவில் பார்த்து, 'உங்க பிள்ளை கணக்குச் சரியாகவே போடுவதில்லை. வீட்டிலே கணக்குப் போடச் சொல்லுங்கோ'ன்னார்.

அம்மா: அப்படியா சமாசாரம்! இதோ கூப்பிடுறேன். டேய் ராமு...ராமு...இங்கே வாடா.

(ராமு வருகிறான்)

ராமு: ஏனம்மா கூப்பிட்டே? அடே, அப்பா வந்துட்டாரா? அப்பா..அப்பா..வந்து..

அப்பா: அப்பாவுக்கு என்னடா கேடு இப்போ? ஸ்கூலில் கணக்கே சரியாகப் போடுவதில்லையாம். அப்பா அப்பான்னு கூப்பிட்டு, சினிமாவுக்கு அழைத்துப் போகக் கெஞ்ச வந்துட்டியா?

ராமு: அதெல்லாம் இனிமே பேசமாட்டேன். கணக்கிலே நல்ல மார்க்கு வாங்கத் தீர்மானிச்சுட்டேன். வாத்தியார் சொன்னார்..

அப்பா: என்னடா சொன்னார் வாத்தியார்?..

ராமு: வந்து..'தினம் அப்பா கிட்டே கணக்குக் கற்றுக்கொள்' என்றார். அதனால் தினம்....

அப்பா: என்ன சொன்னார்? அப்பா கிட்ட கற்றுக்கொள் என்று சொன்னார்? ஏன் அவர் வாங்குவது சம்பளமில்லையாமா? எதற்காக வாத்தியார்னு பெயர் வச்சுண்டிருக்காராம்?

ராமு: அதில்லையப்பா. அவர் சொல்லிக்கொடுக்கும் முக்கால் மணி நேரத்திலே எனக்குக் கணக்குப் புரியவில்லை. அதனால் வீட்டிலேயும் கத்துக்கோடா என்றார்.

அப்பா: உங்கப்பா வேலையில்லாமெ சும்மா உட்கார்ந்திருக்கார்னு அவர் எண்ணமா? போடா போ, என்னால் கற்றுக்கொடுக்க முடியாது. எனக்கு நேரமும் இல்லை. ஏண்டா நானும்தான் பார்க்கறேன். இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் வீட்டிலேயும் வந்து கற்றுக்கொடு, கற்றுக்கொடுன்னு பிராணனை வாங்குகிறீர்களே, ஸ்கூலில் கற்றுக்கொடுக்கும்போது தூங்கவா தூங்குகிறீர்கள்? வீட்டிலே கற்றுக்கொடுப்பதற்கு ஸ்கூலுக்கு எதற்காகத் தண்டச் சம்பளம் கட்டுவது?

ராமு: அதில்லையப்பா, இந்த வாத்தியாருக்குச் சொல்லிக் கொடுக்கவே தெரியலே.

அப்பா: சட், மூடு வாயை. வாத்தியார் மேலே பழி போட வந்துட்டான். வெறும் மக்கு. நாங்க படிச்ச நாளிலே எங்களுக்கு

வீட்டிலே யார்டா சொல்லிக் கொடுத்தா? மூளை துளிக்கூட கிடையாது. ஏழாம் கிளாஸ் கணக்குக்கு இவ்வளவு பேர் சொல்லிக் கொடுக்கணுமா?

அம்மா: இதோ பாருங்கோ, நீங்க திட்டும் நேரத்திலே பத்துக் கணக்கு சொல்லித் தரலாம். ஏதோ இந்த மட்டும் சொல்லிக்கொள்ள குழந்தைக்குப் புத்தி போறதே, அதுவே பெரிசு.

அப்பா: (பரிகாசமாக) ஐயோ பாவம், புத்தி போறதோல்லியோ, ரொம்பச் சந்தோஷம்..டேய், கொண்டாடா கணக்குப் புத்தகத்தை. இரண்டு கணக்கு தர்றேன், போடு.

ராமு: முதல்லே வீட்டுக் கணக்கு போடணும்.

அப்பா: வீட்டுக் கணக்கா? அதற்கு இப்போதிலிருந்து என்னடா அவசரம்? சம்பாதிக்க ஆரம்பித்து, கல்யாணமாகி தனிக் குடித்தனம் போறப் போன்னு தனியா வீட்டுக் கணக்கு ஆரம்பமாகணும். இப்போ வீட்டுக் கணக்கைப் பார்க்க நானிருக்கிறேன். நீ புத்தகக் கணக்கைப் போடு.

ராமு: அதில்லையப்பா, வீட்டிலே போட்டுண்டு வர புத்தகத்திலேருந்து பத்துக் கணக்குக் கொடுத்திருக்கார். அதைப் போடலாம்.

அப்பா: பத்துக் கணக்கா? சரிதான் அவ்வளவையும் நான் போடணுமா? எனக்கு ஆபீஸ் பைலைப் பார்க்க வேண்டிய வேலை நிறைய இருக்கு. நான் போறேன். நீ எக்கேடு கெட்டுப் போ.

ராமு: இல்லையப்பா தெரியாததை மட்டும் கேட்டுக்கறேன்.

அப்பா: சரி. சீக்கிரம் படி கணக்கை.

ராமு: (படிக்கிறான்) ஒருவன் முப்பது லக்ஷ ரூபாயை 9% வட்டி வீதம் போட்டு 5 மாதம் கழித்து எடுத்தால் அசலும் வட்டியும் சேர்ந்து எவ்வளவு அவனுக்குக் கிடைக்கும்?

அப்பா: அசலும் இருக்காது; வட்டியும் இருக்காது. பணத்தைப் போட்ட ஐந்தாவது மாதத்திலேயே திருப்பி எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதுன்னு, கடன் தலைக்குமேல் போய் அவ்வளவும் கடன்காரன் கைக்குப் போகும். அப்பப்பா, கம்யூனிஸ்ட் ராஜ்யம் வந்தால் தேவலை.

அம்மா: கணக்கிற்கும் ராஜ்யத்திற்கும் என்ன சம்பந்தம்?

அப்பா: 30 லக்ஷம் ஒருவனிடமே சேர விடமாட்டான். ஒருவனிடம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்காது. அதனால் இந்த மாதிரிக் கணக்கும் இருக்காது, 30 லக்ஷத்திற்கு எவ்வளவு சைபர் என்ற தடுமாற்றமும் இருக்காது.

அம்மா: கூடவே உங்களிடம் கலப்பை ஏர் கொடுத்து நிலத்தையும் உழச் சொல்வான். ஏதேதோ பேசாமல் கணக்கைச் சொல்லிக் கொடுங்கள்.

அப்பா: போடுடா கணக்கை. நூற்றுக்கு 9 வீதம் 30 லக்ஷத்திற்கு என்ன வட்டி என்று பார்.

ராமு: அப்படி இல்லையப்பா.

அப்பா: பின்னே எப்படி?

ராமு: $\frac{PNR}{100}$ என்ற சூத்திரத்தை வைத்துப் போடணும்.

அப்பா: சரி அப்படியே போடேண்டா மக்கு. அதுக்கு என் உத்தரவு வேணுமா?

ராமு: சரியாக வரலை.

அப்பா: சரியாகப் போட்டால் சரியாக வரும். எங்கேயோ மண்டூகமா வந்து சேர்ந்துட்டியே.

ராமு: சரியாகத்தான் போட்டேன். மீதி வரது.

அப்பா: மீதி வந்தால் அப்படியே போடு.

ராமு: புத்தகத்தில் இருக்கும் விடைக்குத் தப்பாக வரது.

அம்மா: 'புத்தகம் எழுதினவன் 30 லக்ஷம் பாங்கில் போட்டிருந்திருக்கமாட்டான். அதனால் விடையும் தப்பாக இருக்கும்.

அப்பா: சரிதான், மூடுடி வாயை. உன் பிள்ளை தப்புப் போட்டிருப்பான்.

அம்மா: நீங்கதான் போட்டுக் கொடுங்கோளேன்.

அப்பா: இன்று கணக்குப் போட்டுக்கொடு என்பாய். நாளைக்கு அவனுக்குப் பதிலாக ஸ்கூலுக்கும் என்னையே போகச் சொல்வாய்

போலிருக்கே. கணக்குப் போடும் வழியைத்தான் சொல்லிக் கொடுப்பேன். கூட்டிக் கழித்துப் பெருக்கிப் போடுவதெல்லாம் அவன்தான் செய்யணும். டேய் ராமு, அடுத்த கணக்கைப் படிடா.

ராமு: ரூபாய்க்கு 4 படி அரிசி விற்ருல்...

அம்மா: எங்கேடா ரூபாய்க்கு 4 படி அரிசி? சின்னச் சம்பாவா, புழுங்கலரிசியா, சிறுமணியா?

அப்பா: நீ சும்மா இருடி, நடுவில் கெடுக்காதே. மேலே படிடா.

ராமு: ரூபாய்க்கு 4 படி அரிசி விற்ருல் ஒரு குடும்பத்திற்கு ரூ. 12 செலவாகிறது. 2 படி விற்ருல் என்ன செலவாகும்? ஏம்ப்பா இது நேர் விகிதமா? தலை கீழ் விகிதமா?

அப்பா: இரண்டு விதமாகவும் போட்டுப் பார். எது புத்தக விடைக்குச் சரியாக வரதோ அதை வைத்துக்கொள். முதல்லே நேர் வழியிலே போய் நேர் விகிதமாகப் போடு. சரியாக வரலேன்னு தலை கீழாக நின்று போட்டு வெற்றிக் கொடியை நாட்டிவிடு.

அம்மா: நன்னுயிருக்கு நீங்க சொல்லித் தரும் வழி.

அப்பா: நீ குறுக்கே பேசாதே. நான் சொல்லும் வழியை அவன்



கடைப்பிடிப்பான். நீ சும்மா இரு. டேய் ராமு, அடுத்த கணக்கைப் படி.

ராமு: ஒருவர் சம்பளத்தில் மூன்றில் ஒரு பாகம் வாடகைக்கும், ஏழில் ஒரு பாகம் வண்ணானுக்கும் காலே அரைக்கால் பாகம் கறிகாய்க்கும் ஒன்பதில் ஐந்து பாகம் வீட்டுச் செலவுக்கும் போக மிச்சம் 120 ரூபாய் இருந்தது. சம்பளம் என்ன?

அப்பா: கணக்குக் கொடுத்ததே தப்பு. ஒரு வீட்டில் மீதி 10 ரூபாய் கூட மீருது. 120 ரூபாய் எங்காவது மீதி இருக்குமா?

அம்மா: இப்படிப் பேசிப் பேசி அநாவசியமாகக் குழந்தை நேரத்தை வீணுக்காதீர்கள்.

அப்பா: இந்த ஸிம்பிள் கணக்கு இவனுக்குத் தெரியலே. ஏழாவது படிக்க வந்துட்டான். முதல்லே எல்லாத்தையும் கூட்டுடா.

ராமு: கூட்டினேன்.

அப்பா: அதுக்கு மேலே நீயே யோசித்துப் போடேண்டா. நானே சொல்லிக்கொடுத்தால் பரீக்ஷையில் எப்படிப் போடுவாய்?

ராமு: இன்று ஒரு நாள் மட்டும் சொல்லிக் கொடுத்தால் போதும்.

அப்பா: சரி, முதல்லே என்ன செய்தாய், சொல்லு.

ராமு: எல்லாவற்றையும் கூட்டினேன். வண்ணான் செலவுச் வாடகை+கறிகாய்+வீட்டுச் செலவு+மிச்சம் இருந்தது.

அப்பா: அட சட், மண்டூகமே! மிச்சத்தையும் எதுக்கு அந்தப் பின்னங்களோடு கூட்டினாய்? அதை விட்டுட்டுக் கூட்டுடா. மூளை கிடையாது. பரப்பிரம்மமாக வளர்ந்துட்டே. வெறும் மக்கு. தடியன் மாதிரி இருக்கிறாய்.

அம்மா: போதும். நீங்க அவனுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுத்ததும் போதும், அவனைத் திட்டியதும் போதும். அவன் வீட்டுக் கணக்கைக் கவனிச்சது போதும். நம்ம வீட்டுக் கணக்கைச் சொல்லி விடுகிறேன். நேரமாச்சு, எழுந்திருங்கோ. ராமு, நீ போய் விளையாடுடா.

அப்பா: சரி நீ வந்துட்டியா?... சரி சொல்லு, காலேலேந்து என்ன என்ன செலவு செய்தே? கணக்கு எழுதி மிச்சம் சரி பார்க்க வேண்டும். சட் சட்டென்று சொல்லு. ஒரு நிமிஷத்திலே கணக்கைப் பார்த்துவிட்டு ஆபீஸ் பைல்களைப் பார்க்கணும்.

அம்மா: சரி சொல்கிறேன். எழுதுங்கோ. முதல்லே பச்சை மிளகாய் அரையணுவுக்கு வாங்கினேன்.

அப்பா, சரி காரசாரமாக முதல்லே மிளகாய், பிறகு?

அம்மா. கொத்தமல்லி காலணு, கருவேப்பிலை அரையணு, கீரை முக்காலணு, வெற்றிலை ஒரு அணு, இஞ்சி முக்காலணு, வாழை இலை ஒரு அணு, பூ அரையணு.

அப்பா: ச்..அப்பப்பா..ச்! இந்தக் காலணு அரையணுக் கடையை விட்டுட்டு ரூபாய்க் கடை ஆரம்பிக்க நேரமாகுமா? அதை முதல்லே சொல்லேன்.

அம்மா: சரி, எழுதுங்கோ. வண்ணான் ரூ. 5 பால்காரன் ரூ. 30 மளிகை சாமான் ரூ. 20 விறகு கறி ரூ, 10 டாக்டர் பில் ரூ, 25 மருந்து வாங்க ரூபாய்—13 அணு 3 பை 6....

அப்பா: இன்னும் தேதி எட்டு கூட ஆகலே. நீ சொல்ற கணக்கைப் பார்த்தால் கணக்கெழுதும் நோட்டில் இரண்டு பக்கத்திற்கு மேல் ஆகிவிடும் போலிருக்கே. எப்படி வரிசையாக எழுதிக் கூட்டுவது?

அம்மா: நீங்க என்ன குழந்தையா? வாயால் கூட்டிப் போட்டுக் கணக்கைப் பாருங்கள். பி. ஏ. படிச்சுக்கூட எழுதிப் போட்டுத்தான் கூட்டணுமா?

அப்பா: சரிதான் உன் பாராட்டு தலைக் கிளப்பிவிடாதே. இரு, எல்லாவற்றையும் வாயால் கூட்டுகிறேன். சரி கூட்டி விட்டேன். பெட்டியில் மிச்சம் என்ன இருக்கு?

அம்மா: மிச்சமா..ரூ. 2-4-9.

அப்பா: என்ன? கணக்குப்படி பத்து ரூபாய்ன்னு மீதிஇருக்கணும். ஏதாவது கணக்குச் சொல்ல மறந்திருப்பாய். யோசித்துச் சொல்லு; வேறு ஏதாவது ரூ 8 செலவு செய்தாயா?

அம்மா: நான் மறக்கவில்லை. எல்லாச் செலவையும் சொல்லிட்

டேன். இஞ்சி, பச்சை மிளகாய், கணக்கெல்லாம் கூட்டினீர்களா?

அப்பா: சரிதான். காலும் அரைக்காலும் முக்காலும் யார் கூட்டிண்டு திண்டாடுவா, உத்தேசமாக 2 ரூபாய்ன்னு போட்டுட்டேன்.

அம்மா: அப்பப்பா, கணக்குப் போட என்ன அழுகையோ? இவ்வளவு நேரம் ராமுவைத் திட்டினீர்களே!

அப்பா: சரிதாண்டி வயசு 45 ஆயிடுத்து. இன்னும் ரூ. அ. பை. கூட்டல் விடவில்லே.

அம்மா: கிடக்கட்டும், கணக்கு எங்கே தப்பு பாருங்கோ. முதல் லேந்து சொல்றேன். வண்ணான் 5 ரூபாய். பால்காரன் 30 ரூ.

அப்பா: சரி 35 ரூ.

அம்மா: மளிகைக் கடை 20 ரூ.

அப்பா: சரி 45 ரூ.

ராமு: அப்பா, அப்பா 45 ரூபாய் இல்லே. 55 ரூபாய் ஆகிறது.

அம்மா: பார்த்துக்கோடா உங்கப்பா லக்ஷணத்தை! கூட்டல்கூடத் தெரியலே. உன்னைத் திட்டுகிறார்.

அப்பா: இந்தா, இந்த மாதிரி பேசினால் கெட்ட கோபம் வரும். எல்லோருக்கும் தவறுவது சகஜம் தானே. இனி நீயே கணக்கைப் பார்த்துக்கோ.

அம்மா: பி. ஏ. படிச்ச நீங்களெல்லாம் கணக்குப் போட அழுங்கோ. நாங்க படிக்காதவர்கள் போடுகிறோம். அந்த நாளில் வீட்டைப் பெருக்கிக் கூட்டி வேண்டாததைக் கழித்து, அந்தந்த சாமானை அந்தந்த இடத்தில் வகுத்து வைக்கத்தான் நாங்க கற்றோம். ஆனாலும் நாங்க கணக்குப் போட்டால் தப்பே வராது. எங்க கணக்கில் பிசகே இருக்காது. தப்பாகவே போடமாட்டோம்.

(வேலைக்காரி வருகிறாள்)

வேலைக்காரி: அம்மா . . சம்பளம்.

அம்மா: என்னடி . . அப்பவே தான் சம்பளம் கொடுத்து விட்டேனே.

வேலை: சம்பளக் கணக்கிலே தப்பு பண்ணிட்டீங்கம்மா.

அப்பா: சரியாப்போச்சு. அம்மா கணக்கிலுமா தப்பு?

வேலை: ஆமாம் சாமி. நான் 13-ஆம் தேதி வேலைக்கு வந்தேன். மாதச் சம்பளம் 4 ரூபாய் பேசினுங்க. போனமாசம் 31 தேதி. 19 நாளுக்குக் கணக்குத் தப்புப் பண்ணிட்டாங்க.

ராமு: அட கடவுளே. மகன் கணக்குத்தான் தப்பு என்றால் அப்பா கணக்கு, அம்மா கணக்கிலுமா தப்பு விழணும், ஈசுவரா! கணக்கில்லாமல் உலகமே கிடையாதா?

## உனக்குத் தெரியுமா?

1. ஒரு வீட்டில் சில பூனைகளும் சில சேவல்களும் இருந்தன. மொத்தம் அவைகளுக்கு 18 கால்களும் 6 தலைகளும் இருந்தால் பூனைகள் எத்தனை? சேவல்கள் எத்தனை?

2. கண்ணாடி ஜன்னலைத் துடைத்துச் சுத்தம் செய்வதென்றால் பெண்களுக்குப் பெரிய சோம்பல். ஆனால் அதைவிடப் பெரிய நிலைக்கண்ணாடியைத் துடைப்பது என்றால் அவர்கள் தயங்குவதில்லை. ஏன்?

(விடை 40-ஆம் பக்கம்)

# பொழுது போக்கு

எஸ். விச்வநாதன்

தமிழ்ப் புதுவருஷப் பிறப்புடன் உங்களுக்குக் கோடை விடுமுறை தொடங்கிவிடுகிறது. அதைத் தொடர்ந்து நீங்கள் ஏற்கனவே பெற்றுள்ள பட்டப் பெயர்களைப் பெரியவர்கள் ஞாபகப்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள். என்ன யோசிக்கிறீர்கள்? 'கட்டவிழ்த்த கழுதைகள், வாலற்ற வானரங்கள்' என்ற கௌரவப் பட்டங்களையே குறிப்பிடுகிறேன். நீங்கள் பொழுதுபோக்காகச் செய்யும் பொல்லாத்தனங்கள்தாம் அந்தப் பொன்னான பட்டங்களுக்குப் பொறுப்பாளிகள்!

''பெரியவர்களுக்கு என்ன? தங்களுக்கும் பொழுது போவதற்காக எங்களை ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள்'' என்கிறீர்களா? அதுவும் சரிதான்!

வீட்டில் இருந்தால்தானே விஷமம் செய்து அகப்பட்டுக் கொள்கிறோம்; பகல் பொழுதெல்லாம் வெளியே சென்றுவிட்டால் தொல்லை இல்லையே என்று நினைப்பீர்கள். ஆனால் வெயில் பொழுதில் வீட்டைவிட்டு வெளியே நழுவிவிட முடியுமா? நீங்கள் திருட்டுத்தனமாய் வெளியேறுவதை அறிந்தால், விருந்து சாப்பிட்டுவிட்டு விச்ராந்தியாகப் படுத்திருக்கும் அப்பா, ''அடே! யாரங்கே? விசிறியை எடுத்துவந்து சற்று விசிறு'' என்று உங்களைத் தம்மருகில் விசிறியுடன் 'பிரதிஷ்டை' செய்துகொள்ளலாம். ஆனால் அப்பா சற்றுக் கண்ணயர்ந்த வேளையில் நீங்கள் மெள்ள நழுவிவிட்டால், அவருக்கென 'ஸ்பெஷலாக'த் தயார் செய்யப்படும் எலுமிச்சம்பழ 'ஷர்பத்'தில் ஒரு துளிகூட ருசி பார்க்கக் கிடைக்காது!

நிற்க, நீங்கள் வீட்டைவிட்டு வெளியே வந்ததும் ஒரு பொட்டு வெயிலைக்கூட வீணடிக்காமல் மண்டையில் தேக்கி வைத்துக் கொள்வீர்கள். வெப்பத்தின் கடுமையால் மண்டை வீங்கி வெடித்து விடும்போல் ஆனதும், உஷ்ணத்தால் பொருள்கள் விரிவடையும் என்று எங்கேயோ படித்தது உங்களில் யாருக்காவது நினைவு வரும்.

வெயிலில் அலைந்துவிட்டு வீட்டுக்கு வரும் உங்களை யாராவது புதியவர்கள் பார்க்க நேர்ந்தால், ஏதோ வாலில்லாத செங்குரங்குகள் வந்து வீட்டுக்குள் நுழைகின்றனவே என்றுதான் நினைப்பார்கள். தவறு அவர்கள் பேரிலில்லை. எல்லாம் உங்கள் கண்ணும் முகமும் கன்றிச் சிவந்திருப்பதைக் கண்டால், தெரிந்தவர்கள்கூட உங்களைச் செங்குரங்குகள் என்றுதான் தீர்மானிப்பார்கள்!

எனவே உங்களைச் சிலநிமிஷங்கள் வீட்டு வாயிலிலேயே நிறுத்தி வைப்பார்கள். உங்களைக் குழந்தைகளா, குரங்குகளா என்று ஊர்ஜிதம் செய்யவா? அல்லது தக்க தடியடி மரியாதை செய்து வீட்டுக்குள் அழைத்துச் செல்லவா? அல்லது உஷ்ணத்தால் வீங்கி விரிந்திருக்கும் உங்கள் மண்டை, உள்ளே நுழைந்தவுடன் திடீரெனக் குளிர நேர்ந்து வெடித்துவிடும் என்பதற்காகவா? அதெல்லாம் ஒன்றும் இராது. ஒருவேளை, உங்கள் உச்சந் தலையில் ஒரு 'தெர்மா மீட்டர்' வைத்து அன்றைய அதியுச்ச உஷ்ணநிலையைக் கணக்கிடுவதற்காக இருக்கலாம்!

அப்படி அவர்கள் உங்கள் தலையை 'தெர்மா மீட்டரு'டன் நெருங்கினால், நீங்கள் சிறிதும் யோசியாமல், உடனே நேராக ஏதாவது ஒரு மரத்தின்மேல் ஏறி அமர்ந்துவிடுங்கள்! பிறகு யாரும் உங்களை உஷ்ணநிலை பார்ப்பதற்கோ, அல்லது உதை கொடுப்பதற்கோ நெருங்கவே மாட்டார்கள்! சரி, சரி. வாலற்ற ஜன்மங்களுக்கு மரம் ஏறும்படி யோசனை வேறு சொல்ல வேண்டுமா?

# எங்கள் பகுதி

## * இது விமரிசனமல்ல

என் சின்ன அறிவுக்கு எட்டிய ஒரு சிறு யோசனையைக் கூறப் போகிறேன். ஏற்றுக்கொண்டால் 'தாங்க்ஸ்!' இல்லாவிட்டால் 'நெவர்மைண்டு'.

எல்லாப் பத்திரிகைகளிலும் 'உங்கள் ராசி பலன்' என்ற பகுதி வெளிவருகிறது. அதனால் என் போன்ற சிறுவர்களுக்கு ஒரு விதமான பயனும் கிடையாது. அப்பகுதியிலிருந்து எங்கள் பலனை எக்காலத்திலும் அறிய முடியாது. அவை பெரியவர்களுக்குத்தான். உதாரணமாகப் பாருங்கள்:

''மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் பண வருவாய் பெருகும். உத்தியோகத்தில் சிறு மாற்ற மேற்படலாம். மேலதிகாரியின் மனஸ்தாபத்திற்கு ஆளாகாமல் அலுவல்களைக் கவனிப்பது நலம். வீட்டில் மனைவி, மக்கள் உடல் நிலை கவலைக்கு இடமளிக்கும். வியாபார சம்பந்தமுள்ளவர்களுக்கு இந்த வாரத்தில் லாப மேற்படஹேது இல்லை....''

மேலே சொன்ன பலன் எங்கேயாவது எங்களுக்குப் பொருந்துமா? எங்கள் பலனை அறிவது எப்படி?..

அதனால் குழந்தைகள் பலன் அறியும்படி குழந்தைகளுக்காக, 'குழந்தைகள் ராசி பலன்' என்ற புதிய பகுதியைக் கண்ணனில் இனித் தயவு செய்து வெளியிடுவீர்களா? (இதைக் கேட்டுவிட்டு நான் மறைவில் நின்று சிரிக்கவில்லை.)

எஸ். கண்ணன், சென்னை 1.

## தீபஸ்தம்பம்

புது ஆண்டு பிறந்ததிலிருந்து கண்ணன் புதுமையாகவே விளங்குகிறன். காரணம் மேலும் சில புதிய விஷயங்கள் வருவதாலே! அவைகள்:—

பாலர் கவி அரங்கம்:—குழந்தைகளின் கவிதா சக்தியைத் தூண்டி ஒரு புதிய பரம்பரையை உண்டு பண்ண முயற்சி செய்யும் கண்ணனின் சேவை போற்றத் தக்கது.

புதிர்க் கேள்விகள்:—சிந்தனையைத் தூண்டும் புதிய முயற்சி!

பாரஸீக ரோஜா:—சித்திரத் தொடர்கதை என்றால் கண்ணனில் வரும் தொடர்கதைதான் நன்றாக இருக்கும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு! பரிசுகள் வைத்து தொடர்கதை தேர்ந்தெடுத்துக் கண்ணனில் வெளியிடுவது நல்ல யோசனை.

சந்திரகிரிக்கோட்டை முடிவடைவதால் அதற்கு ஓர் அட்டைப் படம் வெளியிடவேண்டும். கண்ணனில் எப்போதும் சரித்திரத் தொடர்கதை ஒன்று வெளிவர வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை.

நேரு என்றால் இந்தியா; இந்தியா என்றால் நேரு: அதுபோல் கண்ணன் என்றால் குழந்தை உலகம்; குழந்தை உலகம் என்றால் கண்ணன் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பொழுது போக்குடனே அறிவு புகட்டும் கண்ணன் குழந்தை உலகிற்கு ஒரு தீபஸ்தம்பம்!

ரா. கிருஷ்ணமூர்த்தி,
கள்ளக்குறிச்சி.

## கண்ணன் ஓர் உபகாரி

பால் முகம் மாறுப் பாலகன் படுத்துறங்க, பாவை யொருத்தி பக்கத்தில் மலர்ந்த முகத்துடன் மலர்க் கொடி தாங்கி, மட்டற்ற மகிழ்ச்சியோடு நிற்கும் காட்சியினைக் கண் குளிரக் காணுமாறு காட்சி தருகிறது கண்ணனின் அட்டைப்படம். அதிலேயே அரை மணி நேரம் கழிந்துவிட்டது. (இந்த அடுக்குச் சொற்களைத் தேட மற்றோர் அரை மணி கழிந்திருக்குமே!—ஆ-ர்)

---

* பரிசு பெற்ற கடிதம்

மாணவர்களுக்கும் மட்டையடி ரசிகர்கட்கும் மகிழ்ச்சியூட்டியது செய்திகள். அருமையான சம்பவத்தை நினைத்தாலே சிரிப்பு வருகிறது. ஆசையின் விளைவு, சகோதர வாஞ்சை, பொறுமைக்காரரின் முடிவு எனும் அடிப்படையில் பின்னப்பட்டு அருமையான கருத்தினைப் போதிக்கிறது வனராஜ்யம்.

இவ்விதழை அலங்கரிப்பதில் தனிச் சிறப்புறுகிறது மர்மத் திருட்டு. கதை மிகவும் நன்றாயுள்ளது. மாயப் பெட்டி தற்காலத்துக்கேற்றதாகவும் நம்பத்தக்கதாகவும் இல்லை. "தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்ற கருத்தினைக்கொண்டு அழகாகவும், நல்ல கருத்தோடும் மிளிர்கிறது பிள்ளையாரின் சக்தி.

வழக்கமான பகுதிகள் அனைத்தும் அடுத்த இதழை நோக்கும்படி அறிவுறுத்துகிறது. கண்ணன் குறும்பு கவிதையுலகிலே தனிச் சிறப்புடையது.

அக்காலக் கண்ணன் பிறர்க்கு உதவி புரிந்து உபகாரியாக விளங்கினான். இந்தக் கண்ணனும் சிறுவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் கதைகள் மூலமும், பேராசிரியர் விஞ்ஞானம் மூலமும் உதவி புரிகிறான். அதிர்ஷ்டப் பரிசு மூலம் 'கண்ணன் ஓர் உபகாரி' என்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

மு. ச. முஹம்மது எஹ்யா,
இரவாஞ்சேரி.

## என் விமரிசனம்

**அ**திருஷ்ட நம்பர்கள் நன்றாகச் சிந்தித்து உருவாக்கியுள்ள ஓர் புதுமைத் திட்டம்; வாசகர்களை உற்சாகமூட்டும் அரிய திட்டம் என்பதில் சந்தேகமேயில்லை. என் அதிருஷ்டத்தையும் பார்த்து விடுகிறேன்.

லீடர் மணி ஆலிவர் டுவிஸ்ட் கதையும் அருமையான அசல் தமிழ்க் கதை; முழுதும் புதுமையான கதை. இது எளிய நடையில் அமைந்த நல்ல கதை. வன ராஜ்யம் ஒரு நல்ல பாடத்தைக் கற்பிக்கிறது. ஆனால் முடிவு மிகவும் சுருக்கமாக உள்ளது.

எஸ். வி. கிருஷ்ணனுடைய துப்பறியும் கதை திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த கதை. அதற்கு வரைந்துள்ள சித்திரங்களும் தெளிவாகவும் நன்றாகவுமிருக்கின்றன. மாயப் பெட்டி சொந்தக் கதையல்ல. ஆனால் முடிவு மட்டும் மாற்றப்பட்டுள்ளது.

பிள்ளையாரின் சக்தியை ரங்கமணி வெகு அழகாக எடுத்துக் கூறியுள்ளார். கடைசி வாக்கியம் ஒவ்வொருவரும் மனத்தில் வைத்துக்கொள்ளும்படி உள்ளது.

எங்கள் கேள்வியின் விடைகள் நன்றாக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. எங்கள் விஞ்ஞான அறிவைப் பன்மடங்காக்குகிறது.

பாரசீக ரோஜா அராபியக் கதையாயினும் அதைச் சித்திரித்துக் காட்டும் எங்கள் கண்ணனுக்கு என் நன்றி. 'எங்கள் பகுதி' விமரிசனத்துக்காக மட்டும் அல்ல. எங்கள் கருத்துக்களை வாரி இறைக்கும் ஒரு கோயில் ஆகும்.

சந்திரகிரிக்கோட்டை முடியப் போகிறதே என்று வருத்தமாக இருக்கிறது.

அட்டைப் படம் பத்திரிகைக்கே கிரீடம்போல் விளங்குகிறது. அழகாகவும் மாணவர்களின் உள்ளத்தைக் கவரக்கக்கூடியதாகவுமுள்ளது. விளம்பரங்களில் அதிகக் கவனம் செலுத்தாமல் அதிகப் பக்கங்களுடன் வெளிவரும் குழந்தைகள் பத்திரிகை இது ஒன்றே.

சுரேந்தர் சம்பக், பம்பாய்-19.

---

**விடை: உனக்குத் தெரியுமா?**

1. மூன்று பூனைகள்; மூன்று சேவல்கள்.

2. ஜன்னலின் இரு புறமும் துடைக்க வேண்டும். கண்ணாடி என்றால் ஒரு புறம் துடைத்தால் போதும். அதனால்தான்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள்

இதோ பக்கத்தில் ஓர் எண் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் இதழ்களுக்கும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு

**பரிசு விவரம்**

| | | |
|---|---|---|
| ...தல் பரிசு | ரூ. 15/- | |
| ...இரண்டாம் பரிசு | ரூ. 10/- | |
| ...ன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா) | ரூ. 5/- | வீதம் |
| ...ாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா) | ரூ. 2/- | வீதம் |
| ...மாத்தம் பத்துப் பரிசுகளுக்கு | ரூ. 50/- | |

**உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்**

**கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்**



...ாவில் நீதிபதிகளாயிருந்த டி.கே. ஷண்முகம், ...ன், ஆனந்தி முதலியோரையும், ஷண்முகம் ...ரிசு பெற்ற குழந்தைகளையும் படத்தில்

# கண்ணன் வெளியீடுகள்

கலைமகள் காரியாலயத்திலிருந்து வெளி வ
கண்ணன் வெளியீடுகள். ஐந்து முதல் பதினறு வய
குழந்தைகளுக்கு ஏற்றவை. நல்ல காகிதம்;
படங்கள்; பெரிய எழுத்துக்கள். குறைந்த
சிறந்து விளங்குபவை கண்ணன் வெளியீடுகள்
இது வரையில் 21 புத்தகங்கள் வெளிவந்து
இன்னும் பல வரவிருக்கின்றன.




இப்போது சை
உள்ளவை

1. அசட்டுப் பிச்சு
2. பவழவல்லி
3. ஜக்கு
4. விஞ்ஞானம் பேசுகிறுர்
5. சமர்த்து மைனு
6. மின்னல் அரக்கன்
7. ஏரிக்கரை மாளிகை
8. மாஸ்டர் பாலகுமார்
9. தூங்கும் அழகி
10. நீச்சல் பழக்கம்
11. கோழி விதைத்த நெல்
12. பார்வதியும் ஏழு சித்திரக் குள்ளர்

பாக்கிப் புத்தக
விரைவில் கி

* ஸெட்டா
ரூ.

கண்

விரிவான விலைப்பட்டியலுக்கு
எழுதுங்கள்